
**Laodicean Times**

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு12 தொகுதி 4 அக்டோபர் - டிசம்பர் 2022

**R 5487**

## சுய கட்டுப்பாட்டின் அவசியம்

## NECESSITY OF SELF-CONTROL

“தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்” – நீதிமொழிகள் 25:28.

பண்டைய காலத்தில், பட்டணங்கள், நாட்டில் வசிப்பவர்கள் பாதுகாப்புக்காக ஒன்றுகூடும் இடமாக, குறிப்பாக அடைக்கலமளிக்கும் இடங்களாக இருந்தன. அப்பொழுது பூமி குறைந்த ஜனத்தொகையையுடையதாக இருந்தது, அரசாங்கத்திற்கான தேவை தற்போது இருப்பதைவிட குறைவாக உணரப்பட்டிருந்தது. எந்த ஒரு கொள்ளையடிக்கிற படையும், தங்கள் தாக்குதலுக்கு திறந்துவிடப்பட்டிருந்த எதையும் உடைமையாக்கிக் கொள்ளும்படி இருந்தது. அதினால் பழங்கால பட்டணங்கள் பலமான மதில்சுவர்களை கொண்டிருந்தன. எருசலேமையும் எரிகோவையும் நினைவுகூறும்போது, இது உண்மையாக இருந்ததை நாம் நினைவுகூறுகிறோம். பழங்கால நகரமாகிய ட்ராயிலும், ஐரோப்பிய பட்டணங்களிலும்கூட இது உண்மையாயிருந்தது. வியன்னாவில் அந்த பட்டணத்தின் பழங்கால சுவர் இன்னும் நிற்கிறது. அதேபோல மற்ற மதிலுள்ள பட்டணங்களுடனும் அப்படியாகவே இருக்கிறது.

ஆனால், முன்னேற்றமடைந்த அரசாங்க முறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், பட்டணங்களுக்கு இனியும் பாதுகாப்பு சுவர்கள் தேவையில்லாமல் போயிற்று. தற்காலத்தில் காவல்துறை ஒரு பாதுகாப்பு சுவரைக் கட்டமைக்கிறது. நம்முடைய திறவுகோல் வசனம், முன்பு பயன்படுத்தப்பட்ட ஒரு மதில்சுவரையும், பாழடைந்த, மதிலிடிந்த ஒரு பட்டணத்தையும் குறிப்பிடுகிறது. சாலமோன் இராஜா, இதை, தன் சொந்த ஆவியின்(சிந்தை) மீது ஆட்சிசெய்யாத ஒரு மனிதனின் உருவகப்படமாக கொடுக்கிறார். அவன் தனக்குள்ளிருந்தும், தனக்கு வெளியிலிருந்தும் ஆதிக்கம் செலுத்துகிற தீமைக்கு எதிராக தன்னைக் காத்துக்கொள்ள இயலாதவனாக இருக்கிறான். உபத்திரவப்பட்டதன் விளைவாக அவனது சித்தம் உடைக்கப்படவேண்டும்.

மனுக்குலத்தார் அனைவரும் ஓரளவு தீர்மானத்துடன் பிறக்கிறார்கள். சிலர் இதை ஒரு குறிப்பிட்ட அளவில் அடைந்துள்ளனர். மற்றவர்கள் குறைந்த அளவில் பெற்றிருக்கிறார்கள். சித்தம், நோக்கத்தின் இந்தப் பண்பு இல்லாமல் ஒருவனும் முழுமையாக இல்லை என நாம் நம்புகிறோம். ஆனால் நம்முடைய சித்தங்கள் பலமாகவோ அல்லது பலவீனமாகவோ இருந்தாலும் அவைகளுக்கு வழிகாட்டுதல் அவசியம் என்பதை நாம் காண்கிறோம். நம் சித்தத்தை இயக்குவதில் உள்ள பாடங்கள் பல்வேறு திசைகளிலிருந்து வருகிறது. உதாரணமாக, தனிமனிதன் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்று இயக்குகிற , குறிப்பாக என்ன செய்யக்கூடாது என்று வழிநடத்துகிற மாநகரத்தின், மாநிலத்தின், நாட்டின் சட்டங்களை நாம் பெற்றிருக்கிறோம். ஒருவர் இந்த சட்டங்களின் ஆதாரத்தையும், வரலாற்றையும் பார்க்கும்போது, அவை ஒரு நீண்ட காலப்பகுதியின் திரட்டப்பட்ட சித்தத்தை குறிப்பிடுகிறதை அவர் காண்கிறார். மனுக்குலம் தற்போது மிக நல்ல சட்டங்களை அடைந்துள்ளது. இன்று சட்ட புத்தகங்களில் நாம் காணும் நீதியான சட்டங்களை, விழுந்துபோன மனிதன் உருவாக்கியிருக்கிறான் என்று நாம் அடிக்கடி விநோதமாக சிந்திக்கிறோம்.

### இம்மாத வெளியீட்டில்


.. சுய கட்டுப்பாட்டின் அவசியம் ... 1

.. நமது நம்பிக்கை– ஆத்துமாவின் நங்கூரம் ... 6

.. நம்முடைய சோதனைகளின் நோக்கம் ... 9

.. நான் எப்படி, எங்கு ஊழியம் செய்வது ? ... 14

.. அபிஷேகம் – ஸ்திரப்படுத்தல் – முத்திரித்தல் ... 16



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ– பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

ஆனால் மிகவும் நல்ல சட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும், இன்னும் ஜனங்கள் அந்த சட்டத்தை பொருட்படுத்தாதிருக்கின்றனர். ஒரு நடுவர் குழு எல்லா சட்டங்களையும் புறந்தள்ளலாம், ஒரு நீதிபதி சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யலாம். இவ்வாறு அநீதியான காரியங்கள் ஒரு தனிப்பட்ட நபரின் அல்லது ஒரு நகரத்தின் அல்லது ஒரு பட்டணத்தின் பழக்கமாக மாறக்கூடும். ஒருவர் ஒழுங்குக்குக் கீழ்ப்படியாத மனப்பான்மையை விளையச்செய்வது, அராஜகத்தின் ஆவியை– அதாவது, மற்றவர்களின் உரிமைகளையும் நலன்களையும் அலட்சியப்படுத்துகிற ஒரு ஆவியை விளையச் செய்வதாயிருக்கிறது. மனிதனுடைய சட்டத்திற்கு நியாயமான மதிப்பை வெளிப்படுத்துகிற சிலர் இருக்கின்றனர். ஏனென்றால், அத்தியாவசியத்தேவை அல்லது பொதுவான கருத்து வேறுவிதமாக செய்வதற்கு இயலாததாக அல்லது செய்யத்தகாததாக ஆக்குகிறது. அவர்கள் இந்த பிரபஞ்சத்தின் மாபெரும் நியாயப்பிரமாணிகராகிய தேவனுடைய பிரமாணத்தைக் குறித்து தங்கள் இருதயத்தில் அராஜகவாதிகளாக இருக்கலாம்.

**தெளிந்த நிதானிப்பின் சோகமான நெறிபிறழ்வு**

கட்டுக்கடங்கா உணர்ச்சிக்கு நம்மை அடிபணியச்செய்வது, நம்மை துடைத்தழிப்பதற்கும், முற்றிலும் தன்வயப்படுத்துவதற்கும், அதை அனுமதிப்பது என்பது நாம் பலவீனமான மனதை உடையவர்களாயிருந்தாலும், பலமான மனதை உடையவர்களாயிருந்தாலும் அது பேரழிவாகவே இருக்கிறது. பலவீனமான மனமுடையவர்கள் அவர்களுக்கென வரம்பு எல்லைகளை உடையோராயுள்ளனர். பலமான மனதுடையவர்கள் அதிகப்படியான வல்லமையைக் கொண்டிருந்து, அவர்கள் தீமைக்கு ஆற்றல்மிக்கவர்களாக இருக்கின்றனர். மிகப்பெரிய மனிதர்கள் பலர் தங்கள் நிதானத்தின் கட்டுப்பாட்டை இழக்கும்போது அல்லது வெடுவெடுப்பாக , மனக்கசப்புள்ளவர்களாக , மோசமான குணமுடையவராக இருக்கும்போது; சரி, இதுதான் என் வழி, நான் எந்த தீங்கும் செய்ததாக தோன்றவில்லை என்று சொல்வதை நாம் கேட்கிறோம். அவர்கள் அந்த விஷயத்தை ஒப்புக்கொள்கிறார்கள். இது தங்களுக்கு இயல்பானது என்று சொல்வதனால் தங்களை நியாயப்படுத்த தேடுகிறார்கள். ஆனால் எந்த மனித ஜீவியும் அவனுடைய அல்லது அவளுடைய விழுந்துபோன சுபாவத்திற்கு ஏற்றபடி ஜீவிக்கக்கூடாது. மனிதன் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான், இன்னும் அவருடைய உண்மையான சாயலின் சில அடையாளங்களை தக்கவைத்துள்ளபடியால், அவன் கீழான மிருகங்களின் தளத்திற்கு மேலாக ஜீவிக்கவேண்டும், அவைகள் வெறுமனே தங்கள் சுபாவ இயல்புணர்ச்சி மற்றும் கட்டுக்கடங்கா உணர்ச்சியை மட்டுமே பின்தொடருகின்றன.

தங்களுடைய உரிமைகளுக்காக எப்பொழுதும் நிற்கிற, தங்களுடைய உயர்ந்த மனம் என்று அழைப்பதற்கு பிரியப்படுகிறவைகளில் மகிமையடைவதற்கு சிலர் தேடுகிறார்கள். மற்ற எவரும் தங்களைக் கடந்துபோக அனுமதிக்குமளவுக்கு அவர்கள் பெலவீனமானவர்–களாகவும், குழந்தைத்தனமானவர்களாகவும் இல்லை. மற்றவர்கள் செய்கிறதையோ அல்லது சொல்கிறதையோ அவர்கள் விரும்பவில்லையென்றால், மற்றவர்களைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையே சொல்வார்கள். அவர்கள் குணலட்சணத்தின் சில ஆற்றலை உடையவர்களாக இருக்கிறார்கள். ஓ ! மாபெரும் எதிராளியும் அவனது சேனைகளும், விழுந்துபோன மூர்க்கத்தனமான சுபாவத்துடன் இணைந்து, தேவனுடைய வார்த்தை என்கிற உண்மையான வழிகாட்டியினால் வழிநடத்தப்படாமலும், அறிவுறுத்தப்படாமலும், குருட்டு நிதானிப்பினாலும் வஞ்சித்து, தவறாக வழிநடத்தக்கூடும். எப்படி அவைகள் நேரியதும், உண்மையாகவே பெலமுள்ளதும் தேவசாயலாக தோன்றுகிறதை, பெலவீனமாகவும் சிறுபிள்ளைத்தனமாகவும் மாற்றமுடியும் ? எப்படி அவைகள் பெலவீனமானதை, மலிவான அல்லது மோசமான சுயநலமான மிருகத் தோற்றமுடையதை, பலமுள்ளதாகவும் மனித நற்பண்பாகவும் மாற்றக்கூடும் !

**எல்லாவற்றிற்கும் சில தரநிலை மூலம் ஒழுங்குபடுத்துதல் தேவை**

மனிதனுடைய விழுந்துபோன சுபாவத்தின் முன்னுரிமைகள், மனச்சார்புகள், தூண்டுதல்கள் ஆகியவை அடிக்கடி சரியான, நேரிய, உண்மையாக விரும்பத்தக்கதாயிருக்கிறவற்றிற்கு எதிராகவே இருக்கிறது என்பதை எல்லாரும் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த உலகத்தை ஆளுகின்ற சமுதாய தரநிலையாலோ அல்லது தேவனுடைய தரநிலையாலோ, ஏதாவது ஒரு தரநிலையினால் எல்லாரும் ஒழுங்குபடுத்தப்படவேண்டும். ஆனால் ஒருவர் பிரமாணத்தின் எழுத்தின்படி ஜீவிக்கலாம், ஆயினும் அதன் ஆவியை மீறுகிறவராக இருக்கலாம். தேவனுடைய பிரமாணம் மிக உயர்ந்த தரநிலையையுடைய பிரமாணமாயிருக்கிறது. தேவனுடைய பிரமாணத்தின் ஆவி, ராஜரீகப் பிரமாணத்தின் விதியை தன்னுள் கொண்டிருக்கிறது. இந்த தரநிலையை முழு உலகமும் சரியென அங்கீகரிக்கிறது. நிச்சயமாக, கர்த்தருடைய

பிள்ளைகள் தங்கள் எல்லா நடத்தையையும் தங்கள் வார்த்தைகளையும், ஆம், தங்கள் எண்ணங்களையும் இந்த தரநிலையினால் அளவிடவேண்டும். இவ்வாறாக, அவர்கள் தங்கள் சொந்த ஆவியை ஆட்சி செய்கிறவர்களாக இருப்பார்கள்.

ஆதார வசனத்திலுள்ள ஆவி என்ற வார்த்தை, ஒருவருடைய சுபாவத்தின் உத்வேகங்களாகிய மனதைக் குறிப்பிடுவதாக கருதப்படுகிறது. நாம் நம் மனதை, சுபாவத் தூண்டுதல்களை ஆட்சி செய்கிறவர்களாக இருக்கவேண்டும். இதன்பொருள் என்னவென்றால், நம் மனதில் ஒரு எண்ணம் வருமானால், அல்லது ஒரு குறிப்பிட்ட தூண்டுதலை நாம் உணர்வோமானால், அந்த சிந்தனை அல்லது தூண்டுதலின் தன்மையை நாம் விரைவாக உணரவேண்டும் என்பதாகும். அது நீதியின் கொள்கைகளோடு அல்லது தேவனுடைய பிள்ளைகளாக நம்முடைய உடன்படிக்கையோடு இசைவில் இல்லையென்றால், உடனடியாக அதை நாம் எதிர்க்கவேண்டும். அடிக்கடி நடக்கிறதாகிய இதை நம்மால் வெற்றிகரமாக செய்ய இயலவில்லையென்றால், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்கிற கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின் கிருபைக்காக அவரை நோக்கி நம் இருதயம் உடனடியாக உயர்த்தப்படவேண்டும். ஒரு செயலை அல்லது செயல்முறையை நோக்கிய ஒரு தூண்டுதலை நாம் உணர்ந்தால், நாம் காரியத்தை கவனமாக எடைபோடவேண்டும். வழிகாட்டுதலுக்காக நம் நம்பகமான உதவும் ஆதாரத்தை நோக்கிப்பார்த்து, அதன் நீதியையும் அல்லது சூழ்நிலைகளின் ஒழுக்கநியதியையும் தீர்மானிக்கவேண்டும்.

இது மிகவும் நுட்பமானதாக இருக்கிறது என உலகம் சொல்லலாம். ஏனெனில் அவர்கள் தங்களின் சொந்த சித்தம் செய்வதில் அதிக சந்தோஷமடைவோராக இருப்பர். ஆனால் அவர்களுடைய சொந்த சித்தம் செய்யும்போது அடிக்கடி கஷ்டத்திற்குள் செல்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். ஒரு கிறிஸ்தவர் தன் சொந்த சித்தத்தை பின்பற்ற மாட்டேன் என்று உடன்படிக்கை செய்துள்ளார். அவர் தன் சொந்த சித்தத்தை விட்டுவிட்டு, அதற்கு பதிலாக தேவ சித்தத்தை எடுத்திருக்கிறார். அந்த கிறிஸ்தவன் எவ்வளவு அதிகமாக முன்னேறியிருக்கிறாரோ, அந்த அளவு அவர் தன் ஆவியை ஆளுகைசெய்யும் ஆற்றலுள்ளவராயிருப்பாரென்று நாம் அதிகமாக எதிர்பார்க்கவேண்டும். அதாவது, ‘‘தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் ‘‘கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படுத்தவேண்டும்’’. நாம் நமது மனதையும் சிந்தைகளையும் ஆட்சி செய்தோமானால், நம் நாவையும் ஆளுகை செய்வோம். மனதில் அந்த சிந்தை இல்லையென்றால் நாவு அதை வெளிப்படுத்தாது.

ஒரு கனநேர தூண்டுதலின் கீழ் சொல்லப்படுகிற அல்லது செய்யப்படுகிற காரியங்களின் மாபெரும் ஆபத்தை நம் இருதயம், நம் அர்ப்பணிக்கப்பட்ட நிதானிப்பு அங்கீகரிக்காது. இதனால் நம்முடைய சிந்தைகளையும், தூண்டுதல்களையும் கீழ்ப்படுத்தவேண்டியது அவசியமாகிறது. என் வார்த்தைகள் அல்லது செயல்கள் மற்றவர்கள்மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் ? இது தீங்கைக் கொண்டுவருமா ? நான் இந்தக் காரியத்தை சொல்வதாலோ அல்லது செய்வதாலோ அது காயத்தை வருவிக்குமா ? அல்லது தேவையில்லாத வலியை விளைவிக்குமா ? அல்லது அது நன்மை செய்யுமா ? என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு தன்னையே ஆராய்ந்து அறிவதினால், தன் ஆவியை அடக்குவதினால் அந்த தேவ பிள்ளை கர்த்தரைப் பிரியப்படுத்துவதற்கும் தன் உடன்படிக்கைக்கு உண்மையாயிருப்பதற்கும் பிரியப்படுகிற இருதயத்தின் ஊக்கமான விருப்பத்தை காண்பிக்கிறார். பிதாவின் சித்தப்படி தங்கள் சொந்த ஆவியை ஆட்சிசெய்யக் கற்றுக்கொண்டவர்களையே அவருடைய இராஜ்யத்தில், அவருடைய குமாரனுடன் உடன் சுதந்தரவாளியாக ஆக்குவதற்கு அவர் பிரியப்படுவார்.

**குணலட்சணத்தின் வலிமையை அடைவது எப்படி ?**

ஒரு கிறிஸ்தவன் தன் சொந்த ஆவியைக் கட்டுப்படுத்துவதை, எந்த வழியில் செம்மைப்படுத்த முடியும் ? ஆரம்பத்தில் தனிப்பட்ட ஒருவர் தன்னை எல்லாவற்றிலும் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருக்க மாட்டார். ஆனால் சிறிய காரியங்களில் சுயகட்டுப்பாட்டை பயிற்சிசெய்ய கற்றுக்கொள்வதற்காக, சிந்தையிலும், வார்த்தையிலும், செயலிலும் இந்த வழியில் தன்னால் முடிந்ததை அதிகமதிகமாக செய்யும்போது, அவர் குணலட்சணத்தில் பலப்படுவார். தன் தசைகளை மேம்படுத்த விரும்பிய ஒருவர், அதற்காக தினமும் ஒரு கன்றுக்குட்டியை தூக்குவதை பயிற்சிசெய்யத் தொடங்கிய கதையை நாம் நினைத்துப்பார்க்கவேண்டும். அந்த கன்றுக்குட்டி மிக சிறியதாக இருந்தபோது அதை அவர் ஆரம்பித்தார். அதை அவர் வாரக்கணக்காக, மாதக்கணக்கில், அனுதினமும் தூக்கினார். ஏற்ற சமயத்தில் அந்த கன்றுக்குட்டி ஒரு காளையாக மாறியது. அப்போது அந்த காளையை தூக்குவதற்கு இயலுகிறவராக அவர் இருந்தார். அவருடைய அனுதின பயிற்சி படிப்படியாக அவருடைய தசைகளை வலுப்படுத்தியது. முழுமையாக

வளர்ந்த காளையைத் தூக்குவதற்கு போதுமான பெலத்தை உடையவராக அவர் ஆகும்வரை, அந்த தசைகள், மிருகத்தின் எடையில் அதிகரித்த அளவிற்கேற்ப பெலத்தில் அதிகரித்தது.

அதுபோலவே கிறிஸ்தவர்களின் குணலட்சண வளர்ச்சியிலும் இருக்கிறது. அனுதினமும் நம் கிறிஸ்தவ போராட்டத்தில் நாம் சுயகட்டுப்பாட்டை பயிற்சி செய்வோமானால், மதிப்பிடமுடியாத அளவு அனுகூலமளிக்கும். அந்த வழியில் ஒரு பலமான குணலட்சணத்தை படிப்படியாக அடைவோம். ஒருவர் பிறப்பதற்கு முன்பே சுயகட்டுப்பாட்டை முறையாக விளையச்செய்வது, அவர் கருத்தரித்திருந்த சமயத்திலிருந்தே அவரில் ஆரம்பிக்கப்படவேண்டும். அந்த தாய், சுயகட்டுப்பாட்டை பயிற்சிசெய்யவேண்டும். அப்போது அந்த மனப்பான்மை அவளுடைய பிறப்பிக்காத குழந்தையின் மனதின்மீது பதியச்செய்யும். அந்த வழியில் மிக அதிக அனுகூலமான நிலையில், இப்படியாக அது இந்த உலகத்தில் பிரவேசிக்கும். பிறந்தபிறகு பெற்றோர்களின் முறையான பயிற்சியின் கீழ், இந்த சுயகட்டுப்பாட்டின் ஆவி, அந்த குழந்தைக்குள் வளரும். அதன்மூலம் அந்த குழந்தை மனிதத்தன்மையை அடையும்போது, இயல்பாகவே சுயகட்டுப்பாட்டை அதிகமாக பயிற்சிசெய்ய இயலும். அப்படிப்பட்ட ஒருவர் தேவனுடைய பிள்ளையாக ஆவாரானால், மெய்யாகவே மிக உயர்ந்த உண்மை கிறிஸ்தவனாக உருவாக்கும். அவர் கர்த்தரில் பலப்பட்டிருந்து, மற்றவர்களுக்கு உதவிசெய்கிறவராக இருப்பார். ஆனால் அந்த இயல்பான அனுகூலத்தை எல்லாரும் பெற்றிருக்கவில்லை. இந்த காரணத்திற்காக அதிக உறுதியுடன் போராட வேண்டியிருக்கிறது.

**ஒழுக்க ரீதியிலான பலம், உடல்பலத்தைவிட மிகவும் விரும்பத்தக்கது**

நம்முடைய ஆவியை ஆளுகை செய்வதில் நம்முடைய திறனை நிரூபிக்க நம் சொந்த வீட்டைக் காட்டிலும் சிறந்த முறையில் காண்பிக்கப்பட வேறு எந்த இடமும் இல்லை. கணவன் மனைவியுடனும், பெற்றோர் பிள்ளைகளுடனும், சகோதரன் சகோதரியுடனும்... இது ஒரு முக்கியமான விஷயமாயிருக்கிறது. சுயத்துடனான போராட்டமே நாம் போராடவேண்டிய மிகப்பெரிய போராட்டமாயிருக்கிறது. ''பட்டணத்தை பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவனே உத்தமன்'' என்று தேவனுடைய வார்த்தை அறிவிக்கிறது. அவன் சரியான வழியில் சுயத்தை கட்டுப்படுத்துகிற வழியில் ஒரு உண்மையான குணலட்சணத்தை, சித்தத்தை, தீர்மானத்தை பயிற்சி செய்வதற்கு கற்றிருக்கிறபடியால், அவன் மதிப்புள்ளவனாயிருக்கிறான்.

ஒழுக்க ரீதியிலான வலிமை, எல்லையற்ற உன்னதமானதாயும், மிகப்பெரிய அளவிலான சரீர பெலத்தைக் காட்டிலும் அல்லது கூர்மையான உத்தியைக் காட்டிலும் மிகவும் விரும்பப்படத்தக்கதாயுள்ளது. இது நாம் நம்மை ஜெயங்கொண்டபிறகு மாத்திரமே, நம்முடைய சொந்த மாம்சத்தின் எஜமானாக ஆகிய பிறகு மாத்திரமே, நம்முடைய கண்களில் உள்ள உத்திரத்தை எடுத்துப்போட்டபிறகு மாத்திரமே, நம் இருதயத்திலுள்ள கோபம், வன்மம், வெறுப்பு மற்றும் சண்டை ஆகியவற்றை அடக்கியிருந்து, நம்முடைய சொந்த பலவீனத்துடனான இந்த கடுமையான போராட்டத்தின் வழிகளினால், சகோதரர்களுக்கு உதவவும், அண்டை அயலகத்தாருக்கு உதவவும் முடியும். நம்முடைய மாதிரிகையினால், அவர்களுடைய குறைபாடுகள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள பாவங்களையும் மேற்கொள்வதில் உதவிசெய்யமுடியும்.

**நாம் கடைசிவரை போராட வேண்டும்**

ஒருவருடைய சொந்த ஆவியை, மனதை, மனப்பான்மையை அடக்கி ஆள்வது, சில விதங்களில் ஒரு பட்டணத்தை பிடிப்பதற்கு சமமான போராட்டத்தை சுட்டிக்காட்டுகிறது. நாம் எங்கு தொடங்குகிறோம் என்பது விஷயமல்ல, ஆயுதம் தரித்திருந்து எதிர்க்கும் அநேக வல்லமைகள் நம்முள் சூழப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். மரபு வழியாக அவைகள் நம்மை ஆட்கொண்டிருக்கின்றன. வீழ்ச்சியின் காரணமாக அவைகள் அங்குள்ளன. நாம் வாலிப நாட்களை கடந்தோமானால், அவைகள் மிக வலுவாக வேரூன்றியிருக்கின்றன. அவைகளை சரியான வழிக்குக் கொண்டுவர மாபெரும் திறனும், போர்த்தளபதியின் கட்டளையை பயன்படுத்தும் திறனும் தேவையாயிருக்கிறது. ஆனால் முன்னதாகவோ அல்லது தாமதமாகவோ துவங்கினாலும், அவருடைய சொந்த ஆவியை ஆட்சி செய்வதில் வெற்றிபெற, ''நல்ல போராட்டத்தை போராடவேண்டும்''. இந்த தற்கால நிலைமையின் மிக இறுதிவரைக்கும் அவர், ''விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும்''.

இந்தப் போராட்டத்தில் தேவனுடைய பிள்ளை வெற்றிபெற வேண்டுமானால், அவருடைய சுபாவத்தின் ஒரு பகுதியாக காணப்படுகிற மரபு வழியாக சுதந்தரித்த தீமைகளின் எல்லா கோட்டைகளையும் தாக்குவது மட்டுமல்லாமல், உடைமையை வென்று, இந்த

அடையாளமான பட்டணத்தின்(அவருடைய சித்தத்தின்) சிங்காசனத்தின் மீது அமர்ந்து ஆதாயமாக்கவேண்டும். அதன்பிறகு அவர் தொடர்ந்து தன்னை தற்காத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் பழைய எதிரிகள் நிலைத்தன்மையோடு விழிப்புடன் இருக்கிறார்கள். விரைவில் மீண்டுமாக உடைமைகளை மீட்டெடுக்க எப்போதும் முயல்கின்றனர். ஆகவே தனது சொந்த ஆவியை தொடர்ந்து ஆளுகின்றவர், தன்னுடைய சிங்காசனத்திலிருந்து எதிரியாகிய பாவத்தை பிடுங்கிப் போடுவது மட்டுமன்றி, பாதுகாப்பான இடத்தில் தன்னை தொடர்ந்து மறைத்து வைத்திருக்கிறார்.

ஒருவர் தன்னுடைய ஆவியை ஆளுகைசெய்வது, எந்தவகையிலும் சுலபமான பணி அல்ல. விளக்கப்படத்தில் உள்ளதுபோன்று, தனி ஆளாக, ஒருவராக இதை செய்யமுடியாது. அதன்விளைவாக, ஞானமுள்ள படைத்தலைவர், தம் கட்டளையில் எல்லா உதவிகளையும் கொடுத்து ஊக்குவித்து உதவுவார். ''மாமிசத்தோடும் இரத்தத்தோடும் மட்டுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு'' என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை நினைவில் கொள்வோம்(எபே6:12). உலகம் மாம்சம் மற்றும் சாத்தானின் வல்லமைகள் நெருக்கமாக கூட்டுசேர்ந்து வேலைசெய்கிறது. எனவே அதை எதிர்த்து வெற்றிபெறவும், அதன்பிறகான ஆட்சியை அமைக்கவும் திட்டமிட்டுள்ளவர், மற்றொரு பலமான வல்லமையோடு கூட்டணி அமைக்கத் தேடவேண்டும். இந்த மாபெரும் பணியை உத்வேகத்தோடு மேற்கொள்கிற எல்லாருக்கும், இந்த வல்லமை வழங்கப்படுகிறது. அது நம் சர்வ வல்ல தேவனுடைய கரமேயன்றி வேறொன்றுமில்லை. தம்முடைய பெலத்தை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு அவர் சொல்கிறார், ''உனக்கு எதிராக இருக்கிறவர்களைக் காட்டிலும், உன்னுடன் இருக்கிறவர் – அதாவது, உனக்காக இருக்கிறவர் பெரியவர்; பராக்கிரமசாலிகளைப் போல உங்கள் அரையைக் கட்டிக்கொண்டு பயப்படாமல் பலங்கொண்டிருங்கள்'' என்கிறார் – 1யோவா4:4; ஏசாயா 35:4ஐ பார்க்க.

இந்த அடையாளமான பட்டணமாகிய ஒருவருடைய ஆவியை ஆட்சிசெய்வது என்பது, முதலாவதாக, கட்டளையிடும் படைத்தலைவனாகிய ''சித்தம்'', பாவத்திலிருந்த தன் பற்றுறுதியை தேவனிடத்திற்கு மாற்றுவதற்கு நேர்மறையுடன் முடிவுசெய்து, அந்த மாற்றத்தை எதிர்க்கிற கிளர்ச்சியாளர்களை வேரறுக்கும்வரை ஒருபோதும் நிறைவேற்றப்படாது. ஆனால் ஒரு சாமானியனின் வார்த்தையில் சொல்லும்போது, ''எங்கே ஒரு சித்தம் இருக்கிறதோ, அங்கு, நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ ஒரு வழி இருக்கிறது''. தேவன் நன்மைக்காக பல்வேறு முகவர்கள் மூலமாக உதவிசெய்வார். சாத்தான் தீமைக்காக பல்வேறு முகவர்கள்மூலம் அப்படிசெய்வான். ''இது செய்யப்படவேண்டும்'' என்று சித்தம் சொல்லுமானால், தேவைப்படுகிற, கிடைக்கக்கூடிய உதவியை அது அழைக்கிறது. உடனே மனதின் மற்ற திறன்களை பணிக்கு அமர்த்தி, முதலில் அடிபணியச்செய்து, பின்னர் முழு ஜீவியையும் ஆட்சிசெய்யவும், ஒழுங்குபடுத்தவும் செய்கிறது. மனம் சார்ந்த எல்லா இயக்கங்களையும் விழிப்புடன் கண்காணிக்க மனசாட்சிக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. மனசாட்சியின் செல்வாக்கின் கீழான நிதானிப்பு, எந்த காரியமும் நீதிக்காகவோ அல்லது அநீதிக்காகவோ முடிவுசெய்து, அதே தார்மீக செல்வாக்கின்கீழ் இருக்கிற சித்தத்திற்கு அறிக்கை செய்யவேண்டும்.

**மனம் என்கிற அரசாங்கத்தின் மூன்று துறைகள்**

இவ்வாறு நம் மூன்று அரசாங்கத்தின் துறைகள் நிறுவப்பட்டிருப்பதை பெற்றிருக்கிறோம். அவை; மனசாட்சியாக எப்போதும் இருக்கவேண்டிய சட்டமன்றம், நீதித்துறையாகிய தீர்ப்பு; செயலாக்கத்துறையாகிய சித்தம். நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட, நீதியாக ஆளுகை செய்கிற ஒவ்வொரு மனதிலும், மற்ற எல்லா உள்ளார்ந்த திறன்களும், இந்த மகாசபைக்கு(Congress) சித்தம் வலியுறுத்துவதாக முறையான ஒழுங்கில் தங்கள் வேண்டுகோள்களை ஏற்படுத்தவேண்டும். தங்கள் விருப்பங்களை முதலில் மனசாட்சிக்கும், பின்னர் நிதானிப்புக்கும் சமர்ப்பிப்பதற்கு முன்பாக, அவைகளை நிறைவேற்ற சித்தத்திற்கு வேண்டுகோள் விடுப்பதை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது. ஆனால் அங்கு அங்கீகரிக்கப்படும்போது, அவர்களது விருப்பங்கள் செயலாற்றும் அதிகாரமாகிய சித்தத்தின்மீது தங்கள் கோரிக்கைகளை சுதந்திரமாக வலியுறுத்தக்கூடும். சித்தமே ஆட்சிசெய்கிறது. அந்த சித்தம் பெலவீனமாக இருந்தால், அரசாங்கம் மந்தமாக இருக்கும், இதனால் பசியார்வங்கள், வெறி உணர்ச்சிகள், மற்றும் அசுத்தமான குறிக்கோள்கள் அந்த சூழ்நிலையை சாதகமாக எடுத்துக்கொள்ளும். அவைகள் சமச்சீரற்ற நிதானிப்பையும், நிசப்தமான மனசாட்சியையும் தேடி, தங்கள் சொந்த காட்டுமிராண்டித்தனமான வழியைப் பெறுவதற்கு சித்தத்திற்கு உரத்தகுரலில் கூக்குரலிடுகிறது.

சித்தம் பெலவீனமாக இருந்து, ஆனால் மனசாட்சிக்கும் தெளிவான நிதானிப்புக்கும் கீழ் தன்னை வைத்துக்கொள்ள போராடுமானால், அதன் ஆளுகைகளில் அது பொருத்தமானதாகவும், ஒழுங்கற்றதாகவும் இருக்கும், மேலும் அந்த அரசாட்சி நிலையற்றதாகவும், இறுதியில் விழுந்துபோன பசியார்வங்கள், பேரார்வங்கள், குறிக்கோள்களின் தயவில் முழுவதுமாக இருக்கும். அதன் காட்டுமிராண்டித்தனமான செயல்முறை தடுத்து நிறுத்தப்படாவிட்டால், அப்படிப்பட்ட ஆத்மாவின் நிலை அராஜகமாக இருக்கும். அது முழு ஜீவியையும் அழிவை நோக்கி மிக விரைவாக இழுத்துச்செல்லும். எனவே சித்தமானது தேவனுக்கும் நீதிக்கும் முழுவதுமாக அர்ப்பணிக்கப்படுவது என்பது எல்லாவற்றிற்கும் முக்கியமானது. மேலும் அது கர்த்தரில் தன்னை பலப்படுத்திக் கொள்கிறது. மேலும் அவருடைய நாமத்திலும் பெலத்திலும், உறுதியான கரத்துடன் ஆட்சிசெய்து, தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள, நன்மையும், பிரியமானதும், பரிபூரணமானதுமான சித்தத்தை தீர்மானிப்பதில், மனசாட்சியையும் நிதானிப்பையும் அதன் உதவியாளர்களாக இருக்க விளையச்செய்யும் – ரோம 12:2.

நிறைவேற்றுவதற்கு மிகவும் கடினமான அலுவலகத்தை சித்தம் பெற்றுள்ளது. புத்துயிரளிக்கப்பட்ட மனசாட்சியினாலும் நிதானிப்பினாலும் அறிவுறுத்தப்பட்ட உறுதியான சித்தம் கொண்ட மனிதனுக்கு கர்த்தருடைய பாராட்டுதல் கிடைக்கும். தன் வீட்டை ஒழுங்காக அமைத்திருக்கிற, அந்த ஒழுங்குமுறையை தன் நாட்களின் இறுதிவர தக்கவைக்கிற கிறிஸ்தவன் பாக்கியவான். அவனுடைய பழைய சுபாவத்தின் முட்களும், நெருஞ்சில்களும் அழிக்கப்பட்டுவிட்டன. சமாதானம் நீதி, மற்றும் அன்பின் அழகான மலர்கள் வளர்க்கப்பட்டுள்ளன. தற்போது அவை அவருடைய குணலட்சணத்தை தழைத்தோங்கச்செய்து அலங்கரிக்கின்றன. அவருடைய பழைய சுபாவத்தில் சண்டையிடும் உட்கூறுகள், அவருடைய புதிய சித்தத்துக்கு கீழ்ப்படுத்தப்–பட்டிருக்கின்றன. கவிஞனாகிய வைட்டியர்( Whittier ) இதை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

வாழ்க்கையின் கரடுமுரடான சுருதிகள் எல்லாம்
ஒரு சங்கீதத்தில் ஒன்றிணைந்து காணப்படுகிறது
போராட்டத்தின் எல்லாக் கோணங்களும்
தற்போது அமைதியாக சுற்றுகிறது.

––––––––

**R 5497**

# நமது நம்பிக்கை “ஆத்துமாவுக்கான நங்கூரம்”

## OUR HOPE - “AN ANCHOR TO THE SOUL”

“நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறாரே” – எபிரேயர் 10:23.

தேவன் புதுசிருஷ்டிகளாக நமக்கு விசுவாசம் அல்லது நம்பிக்கையின் மூலமாகவே கிட்டத்தட்ட எல்லாவற்றையும் தந்திருக்கிறார். நாம் இயேசுவின் பின்னடியார்களாகி, நம் சிலுவைகளை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றுவது என்பது தெய்வீக அறிவுரையின் வழிகளிலும், அழைப்பிலும் புத்திக்கூர்மையோடு அந்தப் படி எடுக்கப்பட்டிருக்குமானால், அது ஒரு பலியோடு சம்பந்தப்பட்டுள்ளது. பலியின் விளைவுகளாக சில வெகுமதியோ அல்லது ஆசீர்வாதத்தையோ அடைவோம் என்ற பற்றுறுதியை அல்லது நம்பிக்கையை அடையாவிடில், ஒருவரும் தாமாக முன்வந்து பலிசெலுத்த மாட்டார்கள். எந்த ஒவ்வொரு முறையான செயல்பாட்டுக்கும் ஒரு நோக்கம் அல்லது இலக்கு இருக்கவேண்டும். இயேசுவைப் பின்பற்றுவதற்கு சபை அழைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை, சில விசேஷ வெகுமதியையும் ஆசீர்வாதத்தையும் தேவ தயவையும் கொண்டுவருகிற அவருடைய செயல்முறையில் ஏதோ இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறது. ஆகவே நாம் அவரைப் பின்பற்றுவோமானால், மகிமை கனம் அழியாமை என்கிற அதே ஆசீரில் அல்லது வெகுமதியில் பங்குபெறுவோம்.

ஆகவே நம் குருவின் அடிச்சுவடுகளில் நடக்க நாம் நம் சிலுவையை எடுக்கும்போது, அவருக்கு வழங்கப்பட்டிருக்கிற மகிமையிலும் கனத்திலும் பங்குபெறும் நம்பிக்கையால் நாம் ஈர்க்கப்பட்டிருக்கிறோம் என்பதை இது குறிக்கிறது. உறுதியான நிபந்தனைகளோடு இணைக்கப்பட்டு, அவரிடமிருந்து நமக்கு வருகிற எந்த சலுகையும், நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு என்றென்றைக்குமான தகுதியுடையதாக இருக்க வேண்டும். நம் தேவனுடைய குணாதிசயம் நமக்கு உறுதிசெய்கிறது. இச்சலுகை என்றென்றைக்குமான தகுதியுடையது என்று நம்மால் ஏற்கப்படவேண்டும். இந்த சலுகையோடு “மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்” இணைந்துவருவது, அவரது உதவியையும் ஏற்ற ஆதரவளிக்கும் வல்லமையையும் நமக்கு உறுதியளிக்கிறது. ஆகவே அவரது பலத்தையும்

அவரது ஒத்தாசையையும் பயன்படுத்துவதன் மூலம், எல்லா நிபந்தனைகளையும் சந்திக்கும் திராணி பெற முடியும். நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள மகிமை நிறைந்த வெகுமதியை அடையமுடியும். இதனால் நமது விசுவாசம் பலமும் உறுதியுமான அஸ்திவாரத்தின்மேல் இளைப்பாறட்டும், ''என்ன வந்தாலும் வரட்டும், விசுவாசம் அவரில் நிச்சயம் நம்பிக்கை கொள்ளும்''.

**உள்ளார்ந்த விசுவாசம் – வெளிப்புற அறிக்கை**

நம் நாவில் கர்த்தரை நாம் அறிக்கையிடும் முன்பாக, வெளிப்புற அறிக்கையை நாம் செய்யுமுன்பாக, இருதயத்தில் நம் விசுவாசத்தை பயிற்சி செய்கிறோம். நீதி உண்டாக நாம் நம்பிக்கை வைக்கும் வரைக்கும், நம் நாவால் அவரை அறிக்கையிட நமக்கு எந்த உரிமையுமில்லை. ஏனெனில்''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் **(ரோம 10:10)**. ஆகவே நாம் அறிக்கை பண்ணும்வரைக்கும், நாம் முறையான விசுவாசத்தைப் பெற்றிருக்கிறோம் என்று கர்த்தர் நம்மைக் கருதுவதில்லை என்ற அவரது பிரகடனத்தை நாம் பெற்றிருக்றிறோம். மனுஷர் முன்பாக நாம் அறிக்கையிட மறுத்தோமானால் அல்லது தோல்வியடைந்தோமானால் பிதாவின் முன்பாகவும், பரிசுத்த தூதர்கள் முன்பாகவும், நம்மை அவர் அறிக்கை பண்ணுவதற்கு தகுதியற்றவர்களாக எண்ணப்படுவோம். கர்த்தருடைய அறிக்கையில்லாமல் இரட்சிப்பு இல்லை, ஆகவே இவை இரண்டும் பிரிக்கமுடியாதவையாயுள்ளன.

சிலுவையின் நிந்தை வந்திடாதபடி தன்னை விலக்கிக்கொள்கிறவன், மரக்காலின் கீழ் தன் வெளிச்சத்தை மறைக்கிறவன், கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படவும், தன் இறுதி அங்கீகாரத்தை அடையவும் நம்பிக்கை கொண்டிருப்பது வீண். ''சிலுவை இல்லையேல் கிரீடம் இல்லை'' என்பது கர்த்தரின் வளைந்துகொடுக்காத முடிவாகும். சத்தியத்தை அதன் அன்பில் ஏற்றுக்கொண்டிருக்கிற அனைவரும், தேவ மகிமைக்காகவும், மற்றவர்களுடைய ஆசீருக்காகவும், தங்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்செய்வதில் மகிழ்ச்சியடைவர். கர்த்தரின் மகிமையான செய்தி நம் சொந்த இருதயங்களை நிரப்பியிருக்குமானால், நம் ஜீவியங்களை ஆசீர்வதித்திருக்குமானால், மற்ற தாகமுள்ள ஆத்துமாக்களுக்கு ஜீவத்தண்ணீரை சுமந்து செல்வதில் நாம் சந்தோஷமடைவோராக இருப்போம். நல்ல விதை நம் இருதயங்களை கனிதரும் நிலமாக கண்டடைந்திருக்குமானால், அது நிச்சயமாக முளைத்தெழும்பி, நம் தேவனுக்கு மகிமை சேர்க்கும்படியாக கனி தரும்.

நம் பிரதிஷ்டையின் நிபந்தனைகளுக்கு இசைவாக, தற்கால ஜீவியத்தையும் கடந்து செல்லக்கூடிய விசுவாசத்தை நாம் அடைந்திருக்கிறோம் என்றும், நம் முன்னோடியாகிய கிறிஸ்து நமக்காக நுழைந்திருந்து, நாம் திரைக்குள் பிரவேசிக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார் என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம் என்றும், மனுஷரிடத்தில் அறிக்கை பண்ணுவோமாக! அவருடைய உயிர்த்தெழுதலில் பங்குபெறுவோம் என்றும், ஒரு நொடிப்பொழுதில் கண் இமைக்கும் நேரத்தில் நாம் மாற்றமடைவோம், ஆவிக்குரிய ஜீவிகளாக அவரைப்போலாவோம், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக்கண்டு, அவரது தெய்வீக நிலைமையாகிய மகிமையில் அவரோடு பங்குபெறுவோம் என்ற நம் நம்பிக்கையை நாம் அறிக்கை பண்ணுவோமாக! அவருடன் பிதாவின் கரத்தில் கருவிகளாக இருந்து, உலக மனுக்குலத்தார் அனைவருக்கும், உயிரோடு இருக்கிறவர்களுக்கும், மரித்தவர்களுக்கும் ஜீவனையும், மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவருவோம் என்ற நம் நம்பிக்கையை அறிக்கை பண்ணுவோமாக! மரணத்திலிருந்து அவர்களை உயர்த்தி, 6000 ஆண்டுகளாக அவர்களை ஒடுக்கியிருந்த எல்லா பாவம், அழிவு, துக்கம் மற்றும் கண்ணீர்களிலிருந்து விடுவிக்கும் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம். உண்மையாகவே ஒரு அற்புதமான நம்பிக்கையை நாம் அடைந்திருக்கிறோம். இதை அறிவிப்பதில் யார்தான் மகிழ்ச்சியடையாதிருப்பார்!

இந்த விசுவாசத்தை, இந்த நம்பிக்கையை நாம் உடையோராயிருப்போமானால், மனிதர் முன்பாக முறையாக அறிக்கையிடுவோமானால், ''உறுதியாயிருக்கக்கடவோம்''. நம் உண்மைத்தன்மைக்கான பரீட்சைகள் தொடர்ச்சியாக வரும். மாம்சம் சில சமயங்களில் பலமாக எதிர்க்க சாயும், இந்த கேள்விகளை தங்கள் முன் வைக்கும்: கிறிஸ்துவை அறிக்கையிட விரும்புகிறாயா? உலகத்தின் முன்பாக அவருடைய நாமத்தை உனக்கு சொந்தமாக்குவதற்கு வெட்கப்படுகிறாயா? அல்லது உன் தலைசிறந்த மேன்மையாக இதை நீ மதிப்பிடுகிறாயா? சோர்வடையும்படியாக சோதனைகள் இருக்கும். நம் முன்பாக நம் பலவீனங்கள் எழும்பி, இந்த சூழ்நிலைகளால் கூடுதலாக மனமுடைந்துபோகும்படியாக விரோதி ஆதாயம் தேடுவான். இந்த தீய கவர்ச்சிகள் நம் விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் வழிகளில் மட்டுமல்லாமல், நம் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் நோக்கத்தில் குறிப்பிட்ட நிந்தைகளும் துன்பங்களும் அனுமதிக்கப்படுகிறது. நம் அழைப்பு அற்புதமானது, இந்த தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரது இடங்களைப் பூர்த்திசெய்ய, ஆண்டவரின்

ஆவியைப் பெற்றிருக்கிற வீரமிக்க ஆத்துமாக்களே தேவைப்படுகிறது.

**வெளிச்சத்தை தடுத்து நிறுத்துவதன் அபாயம்**

யாராகிலும் கர்த்தருக்கும் சத்தியத்துக்கும் உண்மையற்றவர்களாக அல்லது பெலவீனர்களாக இருந்து, தங்கள் உடன் சகோதரரிடையே அவமதிக்கப் பட்டவர்களாக இருப்பதாலோ அல்லது வேறு காரணத்தினாலோ பயந்து உறுதியான தரநிலையை எடுக்கத் தவறினால், அவர்கள் கிறிஸ்துவோடுகூட அவரது சிம்மாசனத்தில், அவரது சரீர அவயவங்களாக பங்குபெற தகுதியற்றோர் என நிரூபணமாகும். இந்த எண்ணிக்கையில் பங்குபெறும் நம்பிக்கையுடையோர் அனைவரும் அவரது நாமத்தை அறிக்கையிட்டிருக்கிறார்கள், அவர்கள் திடமாக இருந்து, இறுதிவரை தங்கள் நம்பிக்கையை பிடித்துக்கொள்ளவும் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவும் வேண்டும்.

மாம்சம் கடுமையாக நடத்தப்படுவதும், அது கீழ்ப்படுத்தப்பட்டு அங்கேயே வைக்கப்படுவதும் அவசியமாகிறது. மாம்சத்தின் சாய்வுப்போக்குகளின்படி, எது இழிவான மற்றும் பாதகமான விமர்சனத்தைக் கொண்டுவருகிறதோ, அதிலிருந்து கர்த்தருடைய பிள்ளைகள் விலகியிருக்க விரும்பவேண்டும். சத்தியத்தை எடுத்துரைக்கும்போது, நிந்தையை அல்லது துன்பத்தை அல்லது புறக்கணித்தலை கொண்டுவருமானால், மாம்சம் அமைதலாக இருக்க விரும்பும். ஆனால் புதுசிருஷ்டியோ பொருத்தமான வாய்ப்பு அருளப்படும்போது, சத்திய செய்தியை கொடாமல் வைத்திருப்பாரானால், எலும்புகளில் அடைபட்டிருக்கிற எரிகின்ற அக்கினியைப்போல் உணருவார். அவர் உண்மையுள்ளவராயிருக்க, தன் வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்பதை அவர் காணவேண்டும். இல்லாவிடில் அந்த வெளிச்சம் மங்கலாகி, இறுதியில் ஒட்டுமொத்தமாக மரிக்கும் நிலையை அடையும். அவரோ காரிருளுக்குள் அகப்படுவார். ''உங்களுக்குள் இருக்கிற வெளிச்சம் இருளாயிருந்தால், அந்த இருள் எவ்வளவு பெரிதாயிருக்கும்!''

ஆகவே நம்முள் இருக்கிற தேவனுடைய பரிசுத்தஆவியை துக்கப்படுத்தாதிருப்போமாக கர்த்தர் நமக்கு ஒரு திடமான அஸ்திவாரத்தை நம் நம்பிக்கையாகவும் விசுவாசமாகவும் அருளியிருக்கிறார். இந்த நம்பிக்கை அவரையே ஊக்கப்படுத்தியிருந்தது. அவருடைய எல்லா நிச்சயமான வாக்குத்தத்தங்களாலும், அவரது ஆணையினாலும் ஆதரிக்கப்பட்டதாக இந்த நம்பிக்கை உள்ளது; மேலும், ''வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே'' என்று நமக்கு அவர் நினைப்பூட்டுகிறார்(எபி**10:23**). ஆயினும் இது இன்னும் வாக்குத்தத்தமாக மட்டுமே உள்ளது. இவை அனைத்தும் விசுவாசத்தினை அடிப்படையாகக் கொண்டது. நாம் தற்பொழுது பரிசுத்தஆவியினால் இந்த புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம், அதே ஆவியினால் முத்திரையிடப்பட்டுள்ளோம்; ''இந்த ஆவி நம் சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறது''(எபேசி**1:13,14**). ஆனால் நம் தேவனை அறியவும், அவரது உண்மையுள்ள வார்த்தையின்மீது நம்பிக்கை வைக்கவும் நாம் கற்றிருக்கிறோம். நாம் அநேக சமயங்களில் மன அழுத்தங்களிலும், அபாயங்களிலும் இருந்தபோது அவரது கிருபைநிறைந்த வாக்குத்தத்தங்கள் நம்மில் நிறைவேறினதை நிரூபித்துள்ளோம். அவர் நம்மைத் தவறவிட மாட்டார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். மேலும் இந்த நம்பிக்கையுடையவன், அவர் தூய்மையுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் தூய்மைப்படுத்திக்கொள்கிறான்.

**நம் நங்கூரம் உறுதியும், நிலையாயுமுள்ளது**

நம் ஆத்துமாக்களுக்கு நங்கூரமாயுள்ள இந்த நம்பிக்கையை நாம் விட்டுவிடுவோமானால், கரையில்லாத கடலின்மீது நாம் அலைந்து திரிகிறவர்களாயிருப்போம். அதன் வலிமைமிக்க அலைகள், நித்திய மரணத்துக்கு நம்மை கீழே இழுத்துச்செல்லும். மகா உபத்திரவக் காலம் தற்போது முழு உலகத்தையும் சிதைக்கப்போகிறது. கர்த்தருடைய பிள்ளைகளில், யாருடைய விசுவாசமும் நம்பிக்கையும் யுகங்களின் கன்மலைமீது உறுதியாக நங்கூரம் பாய்ச்சப்படவில்லையோ, அவருடைய வாக்குத்தத்தங்களின்மீது நம்பிக்கை வைக்காமல் யார் பயப்படுகிறார்களோ, அவர்கள் இந்தப் புயலில் மூழ்கடிக்கப்படுவர். நம் அனுபவம் இதுவாக இருக்குமா?

''உபத்திரவக் காலம் நெருங்குகிறது, பெரிதாய் விரைகிறது

தற்போதுகூட அதன் சிற்றலைகள் உலகெங்குமுள்ள கடலில் விரிந்துள்ளன

ஓ, அதன் அலைகள் கம்பீரமாய் மலைகளைத் தொடுமளவு ஏறுகையில்

எதிர்ப்பற்ற பேரலைகள் என்மீது வீசுமா?

கர்த்தருடைய உண்மை புத்திரர்களில் சிலர், இந்த மகா உபத்திரவக் காலத்தில் தங்கள் பங்கைப் பெற்றிருப்பார்கள். உண்மையுள்ளவர்களும் கீழ்ப்படிபவர்களும் இவ்வாறு துன்புறுவதில்லை. இவர்கள் தங்கள் ஓட்டம் முடியும்வரை பூரண பாதுகாப்பில் வைக்கப்படுவர், மாபெரும் புயல் அதன் சீற்றத்தில் எழும்பும் முன்பாக, இவர்கள் ''திரைக்குள்'' கூட்டி சேர்க்கப்படுவார்கள் என்று நாம் நம்புகிறோம். ஏனெனில் அவர் ஜெயங்கொண்டபடியால் பிதா அவருக்கு வெகுமதியளித்திருக்கிறார் என்ற நம் ஆண்டவரின் மீதான

நம் விசுவாசத்தினிமித்தமும், அவரிடத்திலான நம் பலமான பற்றுறுதியினிமித்தமும், கிறிஸ்து தற்போது நம் பரிந்துபேசுபவராக, நம் மகா பிரதான ஆசாரியராயிருந்து, நமக்காக இடையிட்டு பரிந்துபேசுகிறார் என்று நாம் அறிந்திருக்கிறதினாலும், நம் இருதயங்கள் பலங்கொண்டிருக்கிறது. தம் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், அந்த இராஜ்யத்தில் தம் உண்மையுள்ளவர்கள் அனைவரையும் அவரோடுகூட ஆளுகை செய்யும்படியாக உயர்த்துவதற்கும், அவர் வல்லமையும் மாபெரும் அதிகாரத்திலும் சீக்கிரம் "எழுந்து நிற்பார்" என்று நாம் அறிந்திருக்கிறோம். இதன் காரணமாக நம் நம்பிக்கை உறுதியாயிருக்கிறது, மெய்யாகவே நம் ஆத்துமாக்களுக்கு நங்கூரமாயிருக்கிறது. ஆகவே நாம் "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுகிறோம்" – எபே6:10.

அவர்மீது தொடர்ந்து நிலைத்திருக்கும்படி நம் கண்களை நாம் காத்துக்கொண்டு, நம் கரம் அவரை நெருக்கமாக பற்றியிருக்குமானால், நம் தைரியத்தை நாம் ஒருபோதும் இழக்கமாட்டோம். தேவனுடைய நித்திய வாக்குத்தத்தங்கள், நாம் நம்புகிற அனைத்திற்கும் அஸ்திவாரமாயிருந்து, நம் குணாதிசயமோ அல்லது வரவிருக்கிற மகிமையோ அதன்மீது கட்டப்படுகிறது. எப்பேர்ப்பட்ட பலமான அஸ்திவாரம் இது! ஆகவே நம்மை அழைத்தவருக்கு உண்மையாயிருக்கக்கடவோம்! மகிமை நிறைந்த சத்தியத்தை எழுத்தில் மட்டுமல்ல, ஆவியிலும் பற்றிப் பிடிப்போமாக! அதன் அன்பில் அதைப் பற்றிப்பிடிப்போமாக! ஏனெனில் இது சத்தியமாயிருப்பதோடு, ஒப்பிடமுடியாத அழகும் மாட்சிமையுமுடையது.

நாம் பரிசுத்தஆவியின் கனிகளில் வளர்ச்சியடையவும், நம் தேவன் தம் எல்லையற்ற ஞானத்திலும் அன்பிலும், நம் பரீட்சைக்காகவும், அதிமுக்கிய தேவையாயுள்ள குணாதிசயத்தில் முதிர்ச்சியடையவும் நம்மீது அனுமதிக்கிற ஒவ்வொரு சோதனையையும், ஒவ்வொரு துன்பத்தையும், ஒவ்வொரு கஷ்டத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளவும், சகிப்புத்தன்மையின் பொறுமை மற்றும் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவத்தை எப்பொழுதும் நினைவில் வைப்போமாக! இந்த குணாதிசய முதிர்ச்சியடையாமல், நம் பிதாவின் முகத்தை தரிசிக்கும் நம்பிக்கையை ஒருபோதும் அடையமுடியாது. கிறிஸ்துவோடுகூட அழைக்கப்பட்டிருக்கிற மகிமையில் பங்குபெறவும் முடியாது. ஆகவே "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறாரே" –எபி 10:23. "நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாக" – எபி 3:6. ஆம், " உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்" – எபி 6:11.

"உன் நங்கூரம் வாழ்க்கையின் புயல்களில் நிலைத்திருக்குமா
மேகங்கள் அதன் சச்சரவின் இறக்கைகளை அவிழ்க்கும்போது ?
வலுவான அலைகள் உயரும்போதும்
உறுதியான சங்கிலிகள் தளரும்போதும்
உன் நங்கூரம் தடம் புரளுமா ? அல்லது உறுதியாயிருக்குமா ?
நமக்கு ஒரு நங்கூரம் உண்டு, அது வாழ்க்கையின் அலைகளில்,
ஆத்துமாவை உறுதியாகவும் நிச்சயமாகவும் வைத்திருக்கிறது
கற்பாறையின் மேல் கட்டப்பட்ட அது அசைவுறாது
கர்த்தரின் அன்பில் ஆழமாய் அடித்தளமிட்டு உறுதியாய் உள்ளது!

--------

**R 5499**

# நம்முடைய சோதனைகளின் நோக்கம்"

## THE PURPOSE OF OUR TRIALS

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" – யாக்கோபு 1:12.

இந்த திறவுகோல் வசனத்தில் வருகிற பாக்கியவான்(Blessed) என்கிற வார்த்தையை, தேவனுடைய தயவிலிருக்கும் ஒருவருடைய நிலையைக் குறிப்பதாய்ப் புரிந்துகொள்ளலாம். அத்தகையவர்களின் நிலையானது மகிழ்ச்சியான ஒன்றாக, விரும்பத்தக்க ஒன்றாக இருக்கும். நிச்சயமாக, "பாக்கியவான்" என்கிற வார்த்தையானது, உணர்வுகளுடனோ, அல்லது மனக்கிளர்ச்சிகளுடனோ(feelings or emotions) தொடர்புடைய மகிழ்ச்சியான ஒரு நிலையை எப்பொழுதும் பரிந்துரைக்காது. மாறாக அதன் முடிவுடன் தொடர்புடைய ஒரு நிலையைக் குறிக்கின்றதாயும் இருக்கும். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள இவ்வார்த்தையானது கிறிஸ்துவர்களுக்கான சோதனையின் முடிவுகளோடு தொடர்புடையது. ஜீவகிரீடத்தை வெல்லும் தேவனுடைய பிள்ளை தேவனால் மிகவும் அதிகமான தயவினைப்

பெற்றவராக அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவராக இருப்பார். இந்த முடிவுக்கு வழிவகுக்கும் எதுவும், அது மாம்சத்துக்கு அதிக வலியை ஏற்படுத்தினாலும் சரி, அது மிகப்பெரிய ஆசீர்வாதமாகவே இருக்கும்.

யார் இந்த ஜீவகிரீடத்தைப் பெறுவார்கள்? அவர் என்ன குணமுடையவராக இருப்பார்? தீமையின் தூண்டுதலை, சோதனையைச் சகிக்கும் மனுஷனோ மனுஷியோதான் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. தீமையின் தூண்டுதலை சகிப்பது என்பது எதனைக் குறிக்கின்றது, ஒரு சோதனையை ஒரு முறையோ அல்லது பல முறையோ சகிப்பது மாத்திரம் அல்ல என்பதே இங்கு வெளிப்படுத்தப்படும் கருத்தாக உள்ளது. உலகம்கூட சோதனைகளைச் சகிக்கவேண்டும். ஆக, இங்குள்ள குறிப்பு யாதெனில், சோதிக்கப்படும்போது பொறுமையாக சகிக்கவும், உண்மையாயிருக்கவும் வேண்டும் என்கிற மனப்பான்மையையும், சோதனை மற்றும் அழுத்தத்தின் கீழ் தேவனுக்கு உண்மையாக இருக்கவேண்டும் என்கிற மனப்பான்மையையும் நிரந்தரமாக தக்கவைத்துக் கொண்டிருப்பதாகும். சோதனைக் கவர்ச்சிகள் பல்வேறு மூலஆதாரங்களிலிருந்து வருகின்றன. சோதனைகள் நண்பர்களிடமிருந்து வரலாம், அவர்கள் நம்மை சுயத்திற்குரிய இச்சைகளை திருப்திப்படுத்தும் ஜீவியத்தை ஜீவிக்கவும், கர்த்தருக்கான நம்முடைய மெய்ப்பற்றை ஓரளவு தளர்த்தவும் நம்மைத் தூண்டிவிடக்கூடும். ஐசுவரியத்தின் அல்லது உலகப்பிரகாரமான சமுதாயத்தின் கவர்ச்சிகள், நிர்விசாரமாய் இருப்பதற்கான இயல்பான விருப்பம் மற்றும் தீங்கை சகித்துக்கொள்வதற்கு மாம்சத்தின் விருப்பமின்மை – இவைகளில் ஏதேனும் ஒன்றோ அல்லது அனைத்துமோ, கிறிஸ்தவர்களுக்கான பலமான மற்றும் நுட்பமான சோதனைக்கவர்ச்சிகளாக நிரூபிக்கும்.

ஆனால் நாம் கர்த்தரை எல்லாவற்றுக்கும் மேலாக அன்புகூர்ந்தோமானால், அந்த அன்பே நம் வாழ்வின் பிரதான உந்துவிசையாக மாறிவிடும். நம்முடைய ஆவியிலும், சரீரத்திலும் நாம் தேவனை மகிமைப்படுத்துவதே நம் ஒரே குறிக்கோளாக இருக்கும். தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்கள் உள்ளன என்பதை நாம் அறிவோமே. ஆக, நாம் அவரில் அன்புகூறுகிறோம் என்றால் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவே நாடுவோம். தேவப்பிள்ளை ஒருமுறை தோல்வியடையக்கூடும். அல்லது அதே பலவீனத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்துவதால் அவமானத்திலும், ஆத்துமாவின் ஆழந்த வேதனையிலும், அவர் கர்த்தரிடம் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் அழுவதற்கு வழிநடத்தப்படும்வரையிலும், அதே சோதனையில் மீண்டும் மீண்டும் தோல்வியடையக்கூடும். மேலும் அத்தகைய நபரின் வலியும் இருதய கஷ்டமும், அவருடைய அந்த பலவீனத்தில் அதிக விழிப்புடனிருக்க வேண்டியதன் அவசியத்தை அவருடைய மனதில் பதியவைத்து, அதே இயல்புடைய கூடுதலான தாக்குதல்களுக்கு அவரைப் பலப்படுத்துவதோடு, இவ்வாறு அவரைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவம் மற்றும் அவரது விசேஷித்த பலவீனம் ஆகியவற்றின்மேல் வெற்றிபெற அவரை இயலச்செய்யும்.

**நீதியின் கிரீடம்**

மாம்சத்தில் ஒருபோதும் பரிபூரணத்தை அடையமுடியாது என்றாலும், புது சிருஷ்டியானது உண்மைத்தன்மையோடு இருந்து, கர்த்தருக்கு சிந்தனை, சொல், செயலில் உண்மையாக இருந்து, தொடர்ந்து எதிர்த்து நிற்கவும், எதிர்ப்பதற்கு இன்னும் கடினமாக போராடுவதால், சோதனையை சகிக்கும் வல்லமையானது நாளுக்கு நாள் அதிகதிகமாக குறியிடப்படவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு நாளும் சகிக்கும் மனுஷன் பாக்கியவானாயிருந்து, தன் உண்மைத்தன்மையையும் கீழ்ப்படிதலையும் தேவனுக்கு நிரூபிப்பான். ஏனெனில் அந்த மனிதன் சோதிக்கப்பட்டபிறகு, சோதனைக்காலம் முடிவுக்கு வந்தவுடன், அவன் தன் நேர்மையை முழுவதுமாக வெளிப்படுத்தியிருப்பதாக தேவன் கண்டாரேயானால், அவருடைய ஏற்றவேளை வந்திருக்கும்போது, அவ்வாறு சோதிக்கப்பட்டு தன்னை நிரூபித்தவன் ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.

“ஜீவ கிரீடம்” என்கிற வார்த்தையானது, “ஜீவனுக்கான வெகுமதி” என்று வேறுவழியில் கூறப்படலாம். மேலும் இந்த ஜீவன் மிக உயர்ந்த தளத்தில் இருக்கின்ற ஒன்றாகும். அப்போஸ்தலனாகிய பவுல் இதே கிரீடத்தைக் குறித்து, “நீதியின் கிரீடம்” என்று பேசுகிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு அதை “மகிமையின் கிரீடம்” என்றழைக்கிறார். தேவனுக்கும் அவருடைய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் கீழ்ப்படிந்திருப்பதனாலும், நமது உடன்படிக்கைக்கு உண்மையாக இருப்பதனாலும், நீதியின் பலனாக வரும் வெகுமதியாக இருப்பதால் இது நீதியின் கிரீடமாயிருக்கிறது. கனம்,மகிமை, சாவாமையை கெடுக்கிற வெகுமதியாக இது இருப்பதனால் இது மகிமையின் கிரீடமாக இருக்கிறது.

கிரேக்க விளையாட்டுக்களில் தங்களுடைய திறமை மாவலிமை மற்றும் சரீர ரீதியான சகிப்புத்தன்மை ஆகியவற்றின் சோதனையை வெற்றிகரமாக சகித்தவர்களுக்கு குறிப்பிட்ட சில வெகுமதிகள்

வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட அந்த வெகுமதி, பொதுவாக வெற்றிச்சின்னமாகிய ஒரு கிரீடமாகவோ மலர்வளையமாகவோ இருந்தது. அந்தக்கிரீடம் தன்னில்தானே விலையேறப்பெற்றதாய் இராமல், குறிப்பாக, உயர்ந்த தகுதியைப் போற்றுவதற்கான வெளிப்புற அடையாளமாக இருந்ததினால் விலையேறப்பெற்றதாய் இருந்தது. அது எப்பொழுதும் பசுமையாக இருந்ததென்ற உண்மையானது, ஜெயங்கொள்பவர்களாக கிறிஸ்தவனுக்குக் கிடைக்கும் வெகுமதி நீடித்திருப்பதாகவும், நித்திய வெகுமதியாகவும் இருக்கும் என்பதை வலியுறுத்துகிறது.

கர்த்தர் நமக்கு மிக முழுமையான அளவில் ஜீவனைத் தருவார். பாவத்தின் காரணமாக நம்முடைய மனித சந்ததி மீது வந்த தண்டனை மரணமாக இருந்தது. ஆனால் இப்போது பரிபூரண, கறைப்படாத, முடிவில்லாத ஜீவனை மீண்டும்பெற ஒரு வாய்ப்பு உள்ளது. இந்த ஜீவன் தேவனுடைய குமாரனில் இருக்கிறது. தற்காலத்தில் ஆவிக்குரிய சுபாவத்துக்கு ஜெநிப்பிக்கப்படுவதன் மூலம் மாத்திரமே ஜீவனைப் பெற முடியும். “முற்றிலும் ஜெயங்கொள்கிறவர்களுக்கு” வழங்கப்படவிருக்கிற ஜீவகிரீடமானது, மிகவும் விசேஷித்த வகையான ஜீவனாகும். அது சாத்தியமான மிக உயர்ந்த ஜீவனாகிய அழியாமைக்குரிய ஜீவனாகும், சகல ஜீவனுக்கும் மேலான கிரீடம் அல்லது உச்சகட்ட வெகுமதியாகும். கிறிஸ்துவின் மணவாட்டி என்று வேதாகமத்தில் அழைக்கப்படும் வகுப்பார் தங்கள் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தி, அந்த உயர்த்தப்பட்ட வகுப்பின் அங்கத்தினர்களாக இருக்க தாங்கள் தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்கையில் கிடைக்கும் வெகுமதியாக இது இருக்கப்போகிறது.

அடுத்த யுகத்தில், அந்தக் காலத்திலிருக்கும் பரீட்சைகள் மற்றும் சோதனைகளுக்கு கீழ்ப்படிவதன் விளைவாக, பரிபூரண ஜீவனுக்கான ஜீவகிரீடம் இருக்கும். இப்பரீட்சைகள் தற்காலத்திலுள்ள திருச்சபையின் சோதனைகள் மற்றும் சிரமங்களிலிருந்து பல அம்சங்களில் வேறுபட்டிருக்கும். அவை மிகவும் குறைவான வீரியமுடையதாக இருக்கும். ஏனெனில் எதிர்காலத்தில் வெளியிலிருந்து பாவஞ்செய்வதற்கான தூண்டுதல்கள் அகற்றப்பட்டிருக்கும். சரீர ரீதியான மற்றும் மன ரீதியான மேம்பாடும், உதவியும் வழங்கப்படும். இது அவர்களின் சோதனையை மிகவும் சாதகமான ஒன்றாக மாற்றும். அந்த நாளில் நீதிக்கு உடனடியாக வெகுமதி அளிக்கப்படும். மேலும் பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் ஒவ்வொரு தன்மைக்கும் உடனடியாக தண்டனை வழங்கப்படும். ஆனால் இப்போதோ நீதியானது, மனித நிலைப்பாட்டிலிருந்து பெரும்பாலும், துன்பம் நிந்தை வலி மற்றும் இழப்பைக் கொண்டுவருகிறது. அதே சமயம் பாவமோ பெரும்பாலும் தற்கால அனுகூலத்தையும், மக்கள் செல்வாக்கையும் மற்றும் மாம்சத்துக்கு இன்பத்தையும் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது.

**நம்முடைய சோதனைகள் குறித்த சரியான பார்வை**

தேவனால் தற்போது அழைக்கப்படும் இந்த தனித்துவமான வகுப்பாராகிய சுவிசேஷயுக திருச்சபையினிடமிருந்து, தேவன் ஒரு விசேஷ அன்பைக் கோருகின்றார். தேவனுடைய ஊழியத்தில் அவர்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதற்காக, பூமிக்குரிய தங்களுடைய ஜீவனைக் கையளிக்க மகிழ்ச்சியோடும் மனதாயுமிருந்து, தன்னலமற்ற ஓர் அன்பினைக் கொண்டிருக்கவேண்டும். இவர்களுக்கு தேவன் விசேஷமான ஜீவகிரீடத்தை – அழியாமையை, தம்முடைய சுபாவத்தை வாக்களித்திருக்கிறார். இவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளை ஆசீர்வதிப்பவர்களாக – அதாவது தாங்கள் முன்பிருந்த தங்களுடைய சொந்த சுபாவத்திலிருப்போரை ஆசீர்வதிப்பவர்களாக இருக்கவேண்டும். எப்படி இஸ்மயேல் மற்றும் கேதுராளின் குமாரர்களை ஆசீர்வதிப்பவராக ஈசாக்கு இருந்தாரோ, தங்கள் சகோதரர்களை ஆசீர்வதிப்போராக இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் இருந்தார்களோ, அதுபோல இவர்கள், தாங்கள் எவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளப்பட்டார்களோ, அந்த உலக ஜனத்தார் அனைவரையும் ஆசீர்வதிப்பார்கள். இவ்வளவு மாபெரிய கனத்துக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்!

பரலோக இராஜாவின் இந்த தயவுபெற்ற பிள்ளைகள், கர்த்தருடன் பலியினாலான உடன்படிக்கை செய்தவர்கள்மீது வர அனுமதிக்கப்படும் ஒவ்வொரு சோதனையும், பரீட்சையும், ஒவ்வொரு துன்புறுத்தலும், சிரமமும், அவர்களை வளர்க்கவும், அவர்களின் அன்பை சோதித்து நிரூபிக்கவும், அவர்களின் குணாதிசயங்கள் நீதியில் ஸ்திரப்பட்டிருக்கிறதா, ஆழமாய் நாட்டப்பட்டிருக்கிறதா மற்றும் அடித்தளமிடப்பட்டிருக்கிறதா என்பதை நிரூபிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்கிற உண்மையை எப்போதும் மனதில் வைத்துக்கொள்ள முடியுமேயானால், அது அவர்களின் வலிமிகுந்த அனுபவங்கள் மற்றும் சோதனைகள் அனைத்தையும் ஒரு புதிய வெளிச்சத்தில் அமைக்கும். மேலும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை வெற்றிகரமாக எதிர்த்துப்போராட அவர்களுக்கு மாபெரும் உதவியாகவும் இருக்கும். இந்த சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் மூலம் கர்த்தர் நம்

அன்பையும் பக்தியையும் சோதிக்கிறாரென்றால், அவை பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், நாம் தேவனுக்காகவும் அவர் நிமித்தமாகவும் நமக்குள்ள அன்பின் முழுமையை வெளிப்படுத்தும் வாய்ப்பாக, அவற்றை ஜாக்கிரதையாக பயன்படுத்தவேண்டும். மேலும் நம்முடைய எஜமானரின் சாயலுக்கு மாற்றப்பட்டு வருகிறவர்களாய், ஆவிக்குரிய மேன்மையடைதலில் நாளுக்கு நாள் மாபெரும் உயரத்துக்கு உயரும் வழிவகைகளாக, அவற்றை நாம் ஜாக்கிரதையாக பயன்படுத்தவேண்டும்.

இவ்வாறு பார்க்கப்பட்டு, இவ்வாறு சந்திக்கப்படும் ஒவ்வொரு சோதனையும், துன்பமும் ஓர் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும், “நம்முடைய தேவன் உமக்கு அருகில், உமக்கு இன்னும் அருகில்” என விசுவாசத்தின் சிறகுகளில் நம்மைத் தூக்கி சுமந்துகொண்டிருக்கிற ஒரு பரலோகதூதராக நிரூபிக்கும். ஆகவே அன்பானவர்களே, “என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில்(சோதனைகள், பரீட்சைகள்) அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை(பொறுமையுடன் சகிப்பதை) உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது”. இதிலே நாம் “மிகவும் சந்தோஷப்படுகிறோம்; என்றாலும் துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே( சோதனைகள், நிரூபித்தல்கள்) துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள்” – யாக்கோபு **1:2–4; 1**பேதுரு**1:6–9.**

உண்மையாகவே, “காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் (தற்போதைய ஒழுங்குமுறையின் காரியங்கள்) அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ (வரவிருக்கும் மகிமைகள்) நித்தியமானவைகள்” – **2**கொரிந்தியர்**4:17,18.**

**“நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ”**

இவ்வாறு கர்த்தரில் அன்புகூர்ந்து, இராஜ்யத்தைப் பெறப்போகிறவர்கள், அந்த இராஜ்யத்திற்குச் செல்லும் வழியில், பரீட்சைகளாலும் சோதனைகளாலும் அவர்களது அன்பு சோதிக்கப்படும் என்று தேவனுடைய தவறாத வார்த்தை நமக்கு உறுதியளிக்கிறது. எவர்கள் கர்த்தரை முழு மனதுடன் அன்புகூராதிருந்து, தங்களில் சுயத்தையோ வேறு சில விக்கிரகங்களையோ முதலிடத்தில் வைக்கிறார்களோ, அவர்கள் தெய்வீக வார்த்தைக்கும் தெய்வீக மேற்பார்வைகளுக்கும் விரோதமான கலகத்தின் ஒரு வடிவத்திற்குள்ளாக, உலகத்தாலோ, மாம்சத்தாலோ, பிசாசினாலோ வஞ்சிக்கப்பட்டு இழுக்கப்படுவார்கள். கர்த்தருடைய திட்டம் மற்றும் கர்த்தருடைய வழியைப் பார்க்கிலும், தாங்கள் விரும்புகிற திட்டங்களையும் கோட்பாடுகளையும் அவர்கள் கொண்டிருப்பார்கள். மேலும் அவர்களின் திட்டங்கள் பகுப்பாய்வு செய்யப்படும்போது, பொதுவாக சுயநலத்தின்மீதோ இலட்சியத்தின்மீதோ அல்லது பொறாமை, வெறுப்பு, பகைமை போன்ற பொல்லாத ஆவியின்மீதோ அஸ்திவாரமிடப்பட்டதாக கண்டறியப்படும்.

கர்த்தருடைய வழிநடத்துதலும், கர்த்தருடைய வார்த்தைகளும் அத்தகையவர்களிடம் தன்னுடைய ஈர்ப்பை இழக்கின்றன. மேலும் அவர்களும் அதற்கேற்ப தங்களுடைய ஆர்வத்தையும் இழக்கின்றார்கள்; மேலும் அவருடைய முதலாம் வருகையில் எஜமானரைவிட்டு விலகி, “இது கடினமான உபதேசம்” என்று கூறியவர்களைப்போல, இவர்களும் விட்டுவிலகி, “அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போவார்கள்”. ஆனால் சிலரோ கர்த்தரோடு தொடர்ந்து நடப்பார்கள்; பொல்லாங்கன் மற்றும் அவனது சேனைகளின் திட்டங்கள் மற்றும் சூழ்ச்சிகளால் சிலர் அவரைவிட்டு விரட்டப்படவோ, ஏமாற்றப்படவோ மாட்டார்கள். இவர்கள் இருதயத்தில் தங்களுடையவர்களாய் இராமல், முழுவதுமாக கர்த்தருடையவர்களாய் இருக்கிறார்கள். தேவஆட்டுக்குட்டி அவர்களை எங்கு வழிநடத்திச் சென்றாலும், அவர்கள் அவரைப் பின்தொடர்வார்கள். ஏனெனில் அவருடைய சித்தத்தைத் தவிர அவர்களுக்கு வேறே சித்தமிருப்பதில்லை. அவர்கள் இந்த வாழ்க்கையில் ஒழுக்கம் மற்றும் சோதனையின் இடுக்கமான வழிநெடுகிலும் அவரைப் பின்பற்றுவார்கள்; மேலும்,

இறுதியில், அவர் அவர்களுக்கு உறுதியளித்ததுபோல, ''அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்'' – வெளிப்படுத்தல் 3:4.

**நம்முடைய நிலையான அடைக்கலம்**

சிலருடைய பின்வாங்கிப் போகுதலின் காரணமாக இந்த தேர்ந்தெடுக்கப்படவிருக்கிற வகுப்பாரின் எண்ணிக்கையில் பற்றாக்குறை ஏற்படாது. ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியை உருவாக்குவதற்கு தேவன் ஏற்பாடுசெய்துள்ள முன் குறித்திருந்த எண்ணிக்கை அதுவே. பிதாவின் முன்னறிவானது, பின்வாங்கும் அனைவர் குறித்தும் முழுமையாக கருத்தில் எடுத்திருந்தது. மேலும் தங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிசெய்யும் தேவையான எண்ணிக்கையினர் தொடர்ந்து வருவார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். உலகத்தின் அழைப்பு, மாம்சத்தின் தூண்டுதல்கள் மற்றும் எதிராளியின் திட்டங்கள் அனைத்தும் அவர்களை மரணத்திற்குள் இழுக்கும் கண்ணிகளும் பொறிகளும் குழிகளும் என்பதை இவர்கள் கற்றுக்கொண்டுள்ளனர். இவர்கள் உண்மையான மேய்ப்பனின் குரலைக் கற்றிருக்கிறபடியால், இவர்களை அந்நியர்களின் குரல் கவர்ந்திழுக்காது.

கர்த்தருடைய அருமையான பிள்ளைகளே, நீங்கள் பாக்கியவான்கள்! நீங்கள் ''**உன்னதமானவரின் மறைவினில்**'' அடைக்கலமாயிருப்பதால், உங்களுக்கு எப்பொல்லாப்பும் நேரிடாது, எந்த வாதையும் உங்கள் கூடாரத்தை அணுகாது(சங் 91:10). ''உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்''(சங்91:11,12). இவர்கள் எவ்வளவு பாதுகாப்பாயும் பத்திரமாயும் இருக்கிறார்கள்! அவர்கள் பக்கத்தில் ஆயிரம் பேரும், அவர்கள் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், வாதை அவர்களை அணுகாது(சங்91:7. அவர்கள் 'உன்னதமான கர்த்தரை தங்களுக்கு தாபரமாகக் கொண்டார்கள்''(சங்91:9). அவர் அவர்களை எல்லாத் தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பார்.

அவருடைய செட்டைகளின்கீழே! நான் பாதுகாப்பாய்த் தங்கி வருகிறேனே,

இராப்பொழுது தீவிரமடைந்தாலும், புயல்கள் பேய்த்தனமாக இருந்தாலும் ;

இன்னுமே அவரை நான் நம்பிடுவேனே, என்னை அவர் காப்பாரென்பதையும் நான் அறிவேனே

என்னை அவர் மீட்டுக்கொண்டாரே, அவருடைய பிள்ளை நானே.

அவருடைய செட்டைகளின் கீழே! துக்கத்தில் என்னே ஓர் அடைக்கலமே!

இருதயமுமே எவ்வளவாய் அவரது இளைப்பாறுதலை நோக்கி ஏக்கத்துடன் திரும்புகிறதே!

என் சுகத்திற்குப் பூமியில் பெரும்பாலும் தைலம் இல்லாதபோது,

இங்கேதானே நான் ஆறுதல் கண்டடைகின்றேனே, இங்கேதானே நான் ஆசீரடைகின்றேனே.

அவருடைய செட்டைகளின்கீழே ! ஓ, என்னே விலையேறப்பெற்ற அரவணைப்பு!

ஜீவியத்தின் சோதனைகள் முடியும் வரையிலும் இங்கேதானே நானும் ஒளிந்துகொள்வேனே;

அடைக்கலமடைந்தேன், பாதுகாக்கப்பட்டேன், எப்பொல்லாப்பும் எனக்கு எத்தீங்கும் செய்யாதே

இயேசுவில் இளைப்பாறுகின்றேனே, எப்போதும் நான் பாதுகாப்பாகவே இருக்கின்றேனே!

முதலாம் அறுவடையில் எஜமானரின் உண்மையுள்ள சீஷர்கள், தேவனுடைய ஜனங்கள் என்று தங்களை அறிக்கை செய்தவர்களால் பாராட்டமுடியாத ஓர் அர்த்தத்தை அவருடைய போதனைகளில் உணர்ந்துகொண்டதுபோல, இப்போதும் கர்த்தருடைய இரண்டாம் வருகையில், அவருடன் இருதயத்தில் இணக்கமாக இருப்பவர்களுக்கு அவருடைய வார்த்தைகள் விலையேறப்பெற்ற முக்கியத்துவமுடையதாய் இருக்கிறது. அதனை மற்றவர்களால் உணரமுடியாது. முதலாம் வருகையில் இருந்ததைப்போலவே, இன்றும் சிலர் தடுமாறித் திரும்பிச் செல்வதையும், அதேசமயம் மற்றவர்கள், அவர் அளிக்கும் அவருடைய திட்டத்தைப் பற்றிய அறிவின் மூலம் முன்னெப்போதையும் விட அவரிடம் நெருங்கி வருவதையும் நாம் இப்போது காண்கிறோம்.

**விருந்து சாலையில் விருந்துண்ணுதல்**

அறுவடையின் முடிவை நெருங்க நெருங்க பாதை இன்னும் குறுகலாகி, இன்னும் கடினமாகி, இடறுவதற்கும் விழுந்துபோவதற்குமான சோதனைகள் அடிக்கடி ஏற்பட்டால், நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அப்படியானால், அன்பான சகோதர சகோதரிகளே, நம்முடைய ஆத்துமாவின் மாபெரும் எதிராளியினுடைய சூழ்ச்சிகளுக்கு எதிராகவும், நம் சொந்த விழுந்துபோன சுபாவத்தின் வஞ்சனைகளுக்கு எதிராகவும் அதிகதிகமாக எச்சரிக்கையாக இருப்போமாக. சுயத்தின் மீதான அன்பையும், உலகத்தின் மீதான அன்பையும், அவைகளின் பெருமை, இலட்சியம் மற்றும் முட்டாள்தனத்தையும் விரட்டிவிட்டு, தேவனுடைய பரிபூரண அன்பு உங்கள் இருதயங்களில் ஆளுகை செய்வதாக.

தேவனுக்கான முழு அர்ப்பணிப்பு, உங்கள் இருதயங்களில் சந்தோஷம், இளைப்பாறுதல் மற்றும் சமாதானத்தின் வாக்களிக்கப்பட்ட முழுமையைக் கொண்டுவருவதாக. திராட்சச்செடியில் கனிகொடுக்கும் கிளைகளாக,அவரில் நிலைத்திருந்து, மாபெரும் தோட்டக்காரரின் அனைத்து சுத்திகரிப்புகளுக்கும் இணங்கி, அபரிதமான கனிகளை பலனாக அளியுங்கள்.

வஞ்சகங்கள் நம்மிடத்தே வருமாயின், ஆதிகால சபையின் அப்போஸ்தலர்களுடனேகூட சேர்ந்து, ''ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே''(யோவா6:68) என்று சொல்வோமாக. வேறெங்கும் ஜீவன் இல்லை, நாம் வேறெங்கும் செல்லவும் விரும்புவதில்லை. நாம் நம்முடைய பிதாவின் இல்லத்தின் விருந்துசாலையில் விருந்துண்டு வருகிறோம்.''எங்கள்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே!''(உன்2:4). நாம் அபரிமிதமான ஆகாரங்களைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய மேஜை வளமாய் நிறைந்துள்ளது. அதை புசித்துவிட்டு சந்தோஷமாக நம் வழியிலே தொடருவோமாக. நாம் பரமவீட்டை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய பயணத்தின் கடைசி மைல் கல்லை விரைவில் அடைவோம்! இப்படியாக, நம்முடைய உதடுகளிலிருந்து உதிர்க்கப்படும் ஒரு பாடலுடன் நாம் முன்னோக்கிச் செல்வோமாக!

தீய தூண்டுதலோ, சோதனையோ என்ன நேர்ந்தாலும் சரி,

அவருடைய பிள்ளைகள் அவருடைய மறைவான கூடாரந்தனிலே ஒளிந்துகொள்வார்களே,

நித்திய இராஜனின் நிழலான செட்டையின்கீழ்தானே,

அவருடைய பிள்ளைகள் நம்பிடலாமே, ஆம், அவருடைய பிள்ளைகள் பாடிடலாமே.

தீய தூண்டுதலோ, சோதனையோ கர்த்தர் தாமே தங்கிடுவாரே!

அவரே உந்தன் உண்மையுள்ள மீட்பரும் காவலரும் வழிகாட்டியும்,

உந்தன் கேடகமும் பட்டயமும் உந்தன் மகா பலனுமாவாரே

அப்போது வேலைக்காரன் தன் எஜமானைப்போல இருப்பதுபோதுமே

சோதனைக்காரன் சோதித்தானே, மரித்த இரட்சகரையும்

பாடுபடவும் உன்னை அழைத்திட்டாரே, பின்னர் அவரருகில் ஆளுகை செய்திடலாமே!

அவருடைய சிலுவையை நீயும் சுமந்தாயானால், அவருடைய கிரீடத்தை நீயும் அணிவாயே,

என்றென்றைக்கும் அவருடைய மகிமையையும் பகிர்ந்திடுவாயே''

--------

**R 5498**

# நான் எப்படி, எங்கு ஊழியம் செய்வது?

## HOW AND WHERE SHALL I SERVE?

''சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்'' – 1கொரிந்தியர் 7:24.

இந்த திறவுகோல் வசனத்தில், திருமணம் மற்றும் அதன் பொறுப்புக்கள் குறித்து அப்போஸ்தலர் விவாதிக்கிறார். மேலும் அடிமைகளையும் அவர்களது நிலையைக்குறித்தும் விவாதிக்கின்றார். அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், பின்பு விடுதலையடையும்படி தேடாதே என்கிறார். ஆயினும் அடிமையானவனுக்கு சுயாதீனம் கிடைக்குமானால், ஒரு சுயாதீனனைப்போல் பரந்த ஊழிய வாய்ப்பை தனக்குப் பயன்படுத்துவதில் மகிழ்ச்சியடைய வேண்டும் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார். ஆனால் அந்த அடிமை தன் எஜமானனிடம்; ''நான் தேவனுடைய பிள்ளையாகிவிட்டேன், அதனால் உங்களுடைய விதிமுறைகள் எனக்கு ஒன்றுமில்லை, ஒரு அடிமையாக இனியும் உம்மால் என்னை வைத்துக்கொள்ள முடியாது'' என்று கூறக்கூடாது.

கர்த்தருடைய ஜனங்கள் அவர்கள் அழைக்கப்பட்ட நிலைமையிலிருந்து உடனடியான மாற்றத்தை எதிர்பார்க்கக்கூடாது என்று அப்போஸ்தலர் கருத்து தெரிவிக்கிறார். நீங்கள் தற்போது செய்து வருகிறவைகளிலிருந்து விலக எண்ணவேண்டிய அவசியமில்லை என்பதே அவருடைய கருத்தாயுள்ளது. அடிமைக்குரியதாகவோ அல்லது ஊழியனுக்குரியதாகவோ உங்களுடைய தொழில் இருக்கலாம். உங்கள் மனம் இளைப்பாறுகிறது என்ற உணர்வில் அதில் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தர் கதவைத் திறந்திருப்பாரானால், அப்போது அதைக்குறித்து நீங்கள் கவனிக்கவேண்டும். உங்களது நிலைமை மிகத்தீவிரமான ஒன்றாக இருக்குமானால், கர்த்தருடைய ஏற்றவேளையில், அவருக்குப் பிரியமாயிருந்தால் அவர் அதை குறைப்பார் என்ற உணர்வில் அவரிடம் கேட்பது சரியாக இருக்கும். ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தப்பிக்கும் போக்கை ஏற்படுத்துவதாகவோ அல்லது அவ்விஷயத்தில் வழிகாட்டுவதாகவோ அவர் நமக்கு வாக்களித்திருக்கிறார். இதனால் அதை நம்மால் தாங்க முடியும் (1கொரிந்10:13). இது நம் தொழில் சார்ந்த தொடர்புகளிலும் எல்லாவற்றிலும் பொருந்தும்

ஒருவர் தனியாயிருப்பாரானால், கூடுதலான பொறுப்புக்களை எடுக்கும் காரியத்தைக் குறித்து மிக கவனமாக யோசிக்கவேண்டும். ''நான் தனியாயிருக்கும்போது அழைக்கப்பட்டேன், இப்போது நான் திருமணம் செய்துகொள்ள கர்த்தர் விரும்புகிறாரா? என்ற அவர் யோசிக்கவேண்டும். கர்த்தர் அவ்வாறு விரும்புகிறார் என்று அவர் தீர்மானத்துக்கு வருவாரானால்

“கர்த்தருக்குள்ளாக இருப்பவர்களுக்கு மட்டுமே உள்ள திருமணம் பற்றிய அப்போஸ்தலருடைய அறிவுரையை அவர் நினைவில் கொள்ள வேண்டும். அழைக்கப்பட்டபோதே அவர் திருமணம் செய்தவராயிருந்தாரானால், “நான் திருமணம் செய்யாதிருந்தால் நலமாயிருந்திருக்கும், திருமணம் செய்யாதிருந்தால் என்னால் அதிகமாயும் சிறப்பாயும் செய்ய முடிந்திருக்கும்” என்று அவர் கூறக்கூடாது. அழைக்கப்பட்டபோதே அவர் திருமணம் செய்திருப்பாரானால், அவரது நேரத்தின்மீது அடமானம் வைக்கப்பட்டுள்ளது. அவர் இந்த அடமானத்தை அல்லது ஒப்பந்தத்தை கவனத்தில் கொள்ளவேண்டும்.

**திறந்த வாசல்களில் உட்பிரவேசியுங்கள், ஆனால் அவர்களை வற்புறுத்தவேண்டாம்**

ஆயினும் அப்போஸ்தலர் இதே அதிகாரத்தின் முந்தைய வசனங்களில், அவிசுவாசியாயுள்ள கணவன் அல்லது மனைவி பிரிந்துபோக வேண்டுமானால், அவ்வாறே அவர்கள் செய்யட்டும் என்று குறிப்பிடுகிறார். அவர்கள் பிரிந்துசெல்ல விரும்புவார்களானால் அவர்கள் செய்வதை எதிர்க்க முயலவேண்டாம். கர்த்தர் உங்களுக்குத் தேவையானவைகளை வழங்க வல்லவராயிருக்கிறார் அதை ஏற்றுக்கொள். நமது தொழிலை நாம் விட்டுவிட எண்ணியிருந்து, வேதாகம புஸ்தகங்களை விநியோகிக்கும் பணிக்கு செல்லவோ, அல்லது யாத்திரை பயணம் செய்யும் வேலைக்கோ, அல்லது வேத பாடவகுப்பை விரிவாக்கம் செய்யும் பணியிலோ அல்லது எதுவாயிருந்தாலும், நாம் யோசிக்கவேண்டிய முறையான காரியம் என்னவெனில், இவ்வழி கர்த்தரால் திறக்கப்பட்டிருக்கிறதா ? என்பதையே ஆகும். இவ்வழியில் நமக்கு ஊழியத்துக்கான சிறந்த வாய்ப்பு வருவதை நாம் கண்டடைவோமானால், அறுவடை வயலில் பணிசெய்வதற்கு ஒரு பரந்த வாய்ப்பு திறந்த வாசலாக இருக்கிறதெனில், அப்பொழுது நாம் சந்தோஷமடைந்து, அந்த வாசலில் உட்பிரவேசிக்கவேண்டும்.

ஆனால் திறந்தவாசலை அங்கே கண்டடையவில்லையெனில், நாம் வலுக்கட்டாயமாக திறக்க நேரிடுமானால், அவ்வாறான பணியில் நுழைவதற்கு சில சரியான கொள்கையை மீற நேரிட்டால், அது உண்மை நிலையை மாற்றும். நாம் கொள்கைக்காக நிற்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபடுவதற்கான எந்த சரியான கொள்கையையும் நாம் ஒருபோதும் எதிர்க்கக்கூடாது. ஊழியம் செய்ய எப்போதும் சில வழி இருக்கும். இங்கு அப்போஸ்தலர், சகோதரர்களுக்கு முகவரியிட்டு எழுதுகிறார், அவருடைய வார்த்தைகள் அப்போது கனவீனத்துக்குரிய, பகுதிநேரத் தொழில் செய்துவந்த எவரையும் குறிப்பிடவில்லை.

**எந்த சகோதரனும் இழிவான தொழிலில் இல்லை**

ஒரு மனிதன் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, ஒரு சூதாட்ட வீட்டின் காவலராக இருந்தார் அல்லது வேறு சில இழிவான தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்று வைத்துக்கொள்வோம். மதுபானக்கடையிலும் வேலை செய்திருக்கலாம்,(அநேக சகோதரர்கள் இந்த தொழிலிலிருந்து வந்திருக்கிறார்கள்). சத்தியத்தை அவர் ஏற்றுக்கொண்டபிறகு, அவர் கூறலாம்; “நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் ? மனிதர்களுக்கு தீங்கிழைப்பதை நான் விநியோகிக்கிறேனா ? நான் இதை விட்டுவிடவேண்டும்”. இவ்விதமாக அவர் தேவனுடைய பிள்ளை ஆகுவதற்கு முன்பாக, மதுபான தொழிலிலிருந்து வெளியேறவேண்டும். அவர் தேவனுடைய பிள்ளையாக ஆவதற்கு முன்பாக, கொள்கையற்ற மனநிலையிலிருந்து வெளியேறியிருக்கவேண்டும். “சகோதரரே, அவனவன் தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்” என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகள் சகோதரர்களுக்கு கொடுக்கப்பட்டன. தன் மனசாட்சி வெறுக்கின்ற தொழிலைச்செய்து, தன் உடன் சிருஷ்டிப்புகளுக்கு தீங்கு ஏற்படுத்துபவன், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனாக இருக்கமுடியாது.

அப்போஸ்தலர்களின் நாளில், இந்த முழு விஷயமும் ஊழியக்காரர்களுக்கு நிச்சயமாகவே வலிமையானது. தாழ்மையான வகுப்புக்கள், ஊழியர் வகுப்புக்கள், அடிமை வகுப்புக்களில், அந்நேரத்திலும் ஒவ்வொரு வேளையிலும், செய்தியைப் பெற்றுக்கொள்ளத் தயாராயிருந்தது தெரியவருகிறது. நம் கர்த்தர் ஐஸ்வரியவான்கள் வகுப்பாருக்கு கூறினார்; “ஐஸ்வரியவான்களே உங்களுக்கு ஐயோ!”; தரித்திரரைப் பார்த்துக் கூறினார்; “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்”. ஒளியினிடத்திற்கு வந்தவர்களில் ஞானிகள் அநேகரில்லை, ஐஸ்வரியவான்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை என்று நாம் காண்கிறோம்.

**தண்டனையளிக்கும் நிறுவனங்களில் சகோதரர்கள்**

தண்டனையளிக்கும் நிறுவனத்திலுள்ள ஒரு கைதி, இவ்வாறு தனக்குள்ளாக சொல்லிக்கொள்வது நல்லது: “நன்று, தேவனுடைய ஏற்பாட்டின்கீழ், இந்த செய்தியானது இங்கு சிறைச்சாலையில் என்னை வந்தடைந்தது, ஒருவேளை நான் இங்கு இல்லாதிருந்தால், இதை ஒருபோதும் அடைந்திருக்கமுடியாது”. அப்படிப்பட்ட நபராக நாம் ஒருவேளை இருந்திருப்போமானால், விடுதலைபெறவேண்டி விண்ணப்பம் அனுப்புவதன்மூலம் கதவுகளைத் திறக்க வழிவகைகளைத்தேடி அவசரப்படுவதற்கு முயற்சிக்காமல், அப்படி விண்ணப்பிக்கத் துவங்குமுன், நன்கு ஆலோசிக்கவேண்டும். “ஒருவேளை, கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கு இந்த உடன் கைதிகளிடையே எனக்கு வாய்ப்பு கிடைக்கலாம், அவர்களுக்கு பிரசங்கிக்கும் வாய்ப்பை ஒருவேளை நான் அடையக்கூடும்” என்று நாம் நினைப்போமாக ! அல்லது, விடுதலை செய்வதற்கான விண்ணப்பம் அளிக்கப்படுமானால், மேலும் அந்த விண்ணப்பம் மறுக்கப்படுமானால், அவ்விஷயத்தில் கர்த்தருடைய வார்த்தையாக அதை எண்ணிக்கொண்டு, அந்த மறுப்புக்கு நாம் தலை வணங்கவேண்டும். நாம் முழு

நிறைவோடும் முழு மகிழ்ச்சியோடும், "இருளிலிருந்து அவருடைய அற்புதமான ஒளியினிடத்திறகு வரவழைத்தவருடைய புகழை எடுத்துரைக்க, நான் பெருமுயற்சி செய்வேன்" என்று நாம் கூறவேண்டும். அந்த மனிதன் அங்கேயாவது, வேறு ஏதாவது ஓரிடத்திலாவது ஊழியம் செய்ய நல்ல வாய்ப்பைப் பெறுவார், அதை நம்மால் அறியமுடியாது. கர்த்தர் தம் உண்மையுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் எது சிறந்ததோ அதைத் தருவார்.

---------

**R 5498**

# அபிஷேகம் பண்ணுதல் - ஸ்திரப்படுத்துதல் - முத்திரித்தல்

## ANOINTED - ESTABLISHED - SEALED

"உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து ..." – 2கொரிந்தியர் 1:21,22.

அப்போஸ்தலர் இங்கு கொரிந்துவிலுள்ள சபைக்கு முகவரியிட்டு எழுதுகிறார். அந்த சபையின் அங்கங்கள் அவருடன் உடன்வேலையாட்களாக இருக்கிறார்கள். அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் அங்கங்களாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்று அங்கீகரிக்கிறார். முன்கூட்டியே தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டபடி, கிறிஸ்து அவருடைய குணமாக்கும், போதிக்கும், உதவும், உயர்த்தும் வேலையினால் உலகத்தை ஆசீர்வதிக்கிற நிஜமான தீர்க்கதரிசியாக, நிஜமான ஆசாரியராக, நிஜமான இராஜாவாக இருக்கிறார். அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீரத்திற்குள் நம்மைக் கொண்டுவந்து, நம்மை அமைத்து அல்லது ஸ்திரப்படுத்துகிறவர் தேவனே என்று கூறுகிறார். தம்மிடம் வருபவர்களுக்கான அழைப்பை தேவனே தருகிறார் என்பதை இது சுட்டிக் காண்பிக்கிறது. முந்தைய அழைப்பு அங்கு இருந்ததை இது சுட்டிக் காண்பிக்கிறது, அந்த கனத்தை எந்த மனிதனும் தனக்குத்தானே எடுத்துக்கொள்வதில்லை என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இயேசுவும்கூட ஒரு ஆசாரியராக, ஒரு இராஜாவாக இருக்கிறதற்கான கனத்தை அவரே எடுத்துக் கொண்டிருக்கமுடியாது. நான் ஒரு ஆசாரியராக இருப்பேன், ஒரு இராஜாவாக இருப்பேன் என்று அவரால் சொல்லமுடியாது.

இந்த சபையின்மீது அல்லது சரீரத்தின்மீது மாபெரும் தலையாயிருப்பதற்கு தேவன் இயேசுவை அழைத்ததுபோல, இயேசுவின் மூலமாக சபையினுடைய அங்கத்தினராக ஆவதற்காக, தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் நிபந்தனைகளுக்கு இணக்கமாயிருந்து நம் மாபெரும் பரிந்துபேசுபவர் மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தில் பொருத்தப்படுகிறோம். அது தானாக நடப்பதில்லை, மாறாக நாம் நிலைநிறுத்தப்படுகிறோம். சில உண்மையற்ற தன்மையினால், இந்த நிலைமையில் நாம் தொடராவிட்டால், நாம் அழிக்கப்படுவோம், மேலும் நமக்கு பொருத்தமானதாக இருந்த கிரீடம் எடுத்துப்போடப்படும்.

நம்மைப் பொருத்தி, நிலைநிறுத்தி, பரிசுத்தஆவியினால் நம்மை அபிஷேகம் செய்து, இப்படியாக இந்த பரிசுத்த கூட்டத்தின் அங்கத்தினராக ஏற்படுத்தினவர் பரலோகப் பிதாவாகிய நம் தேவனே. நம்மை நிலைநிறுத்த அபிஷேகம் செய்வது நம் மீட்பரின் எல்லைக்குட்பட்டதும் அல்ல. அப்போஸ்தலர் சொல்வதைப்போல, "தேவனே தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்". சகலமும் தேவனுடையது. சகலமும் குமாரன் மூலமாக உண்டானது. இதனால் நாம் பெற்றுள்ள இந்த அபிஷேகமும் பிதாவினிடத்திலிருந்து வருகிறது. இருந்தபோதிலும் அதன் வாய்க்காலாக கர்த்தர் இயேசுவே இருக்கிறார். பிதா இயேசுவுக்குக் கொடுத்த இந்த பரிசுத்த ஆவியை, அவர் நம்மீது பொழிந்தருளியுள்ளார். பிதா அதை அங்கீகரித்திருக்கிறார், குமாரன் அதை ஊற்றுகிறார்.

**ஆண்டவரின் சாயலில் முத்திரிக்கப்படுதல்**

மேலும் தேவனே "நம்மை முத்திரித்தும் இருக்கிறார்". நாம் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, சரீரத்தில் பொருத்தப்படுவது மட்டும் முக்கியமல்ல, மாறாக நாம் முத்திரிக்கப்படுவது அல்லது பொறிக்கப்படுவது என்பது மற்றொரு விலையேறப்பெற்ற கருத்தாயிருக்கிறது. நாம் ஒரு முத்திரையைப் பெறவேண்டும். மெழுகுக்குள் முத்திரை பதிக்கவேண்டுமானால், அந்த மெழுகை உருக்கி அதன் முத்திரை சாயலை வருவிப்பதுபோல, தேவசித்தத்தை அறியவும் செய்யவும் விருப்பமாயிருக்கிற நம்மிடையேயும் அவ்வாறே இருக்கிறது. நம் பிரியமான ஆண்டவரின் சாயலுக்குள் அவரது பரிசுத்தஆவியினால் நாம் முத்திரையிடப்படுகிறோம். மேலும் நாம் முத்திரிக்கப்படுதலின் வாய்க்காலாக சத்தியம் இருக்கிறது.

எனவே பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்பட்டவர்கள் சத்தியத்தை மதித்துணர்ந்து போற்றுவதை ஒரு குறிப்பிட்டஅளவு பெற்றிருக்கிறார்கள். சகல வாக்குத்தத்தங்களும் தேவனுடைய வார்த்தையின் மூலம் வருகிறது. தற்போது கிரியை செய்கிற வல்லமையாக இதுவே இருக்கிறது. எனவே உலகத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருக்கிற சகல தேவஜனங்களும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மூலமாக முத்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறார். ஏனென்றால் அது அவருடைய வாக்குத்தத்தங்களினால் வருகிறபடியால், இந்த முத்திரித்தல் பிதாவினுடையதாயிருக்கிறது. இது சபையின் தலையாயிருக்கிற நம் கர்த்தராகிய இயேசுவின் வழிகாட்டுதலின் கீழும், பராமரிப்பின் கீழும் இருக்கிறது. அவர் ஏற்ற சமயத்தில் நம்மை குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தேவன்முன்பாக நிறுத்துவார்.

ஓ கர்த்தாவே; உமது சாயலில் நான் இருந்தால், விழித்திருந்து,
உம்முடைய தூய்மையான சாயலை பிரகாசிக்கக்கூடும்
மாம்சத்தின் கட்டுக்களை என்னால் உடைக்க முடியும்போது,
அப்போது, நான் திருப்தியாவேன், சுதந்திரமாய் இருப்பேன்

---------